# மன்னா

"உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவராக இருங்கள்" (மத.5: 48)

விலை ரூபா 12.00

மன்னார் மறை மாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

பொழிவு 15 | ஆனி, 2002 | (தனிச் சுற்றுக்கு மட்டும்) | குவிப்பு 84

மன்னார் மறை மாவட்ட வெளியீடு / PUBLISHED BY THE DIOCESE OF MANNAR


# கருச்சிதைவு அருவருக்கத்தக்க ஒரு பாவச்செயல்!

## விசேட நிலமைகளில் கருச்சிதைவுக்கு அனுமதி வழங்கலாம் என்னும் அரசியல் சட்ட சீர்திருத்தம் தொடர்பான செய்திக்கு

# இலங்கை ஆயர்கள் கடும் ஆட்சேபம்!

அரசின் கருச்சிதைவு கொள்கை தொடர்பாக உள்ளூர் ஊடகங்களில் வெளிவந்த செய்திக்கு இலங்கை ஆயர்கள் கவலையும், ஆட்சேபனையும் தெரிவித்துள்ளனர். அண்மையில் உள்ளூர் ஊடகத்துறையானது, அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட "விசேட நிலைமைகளில் ஒரு குறிப்பிட்ட அளவிலும், தெரிவு செய்யப்பட்ட அடிப்படையிலும், கருச்சிதைவுக்கு அனுமதி வழங்கலாம் எனும் அரசியல் சட்ட சீர்திருத்தம் கருச்சிதைவுக்கான தடையை நீக்குகிறது" எனும் செய்தியைத் தாங்கி வந்தது. இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் இந்தச் சீர்திருத்த அறிக்கையின் மட்டில் தமது ஆழ்ந்த கவலையையும், ஆட்சேபனையையும் தெரிவித்துள்ளனர். கத்தோலிக்கருக்கு கருச்சிதைவு ஒரு அருவருக்கத்தக்க பாவச்செயல் என இது தொடர்பாக இலங்கை ஆயர் மன்றத்தினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

(இந்த அறிக்கையின் முழு விபரத்தையும் 3ம் பக்கத்தில் காணலாம்)

---

### குருத்துவத் திருநிலைப்படுத்தல்

### நானாட்டான் கிராமத்தின் 12 வது குரு

## அருட்பணியாளர் இராஜநாயகம்



நானாட்டான் கிராமத்தைச் சேர்ந்த திரு. சூசைப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை மற்றும் திருமதி அந்தோனிப்பிள்ளை அன்னம்மா ஆகியோரின் கனிஸ்ர புதல்வன் அருட்சகோதரர் செபஸ்ரியாம்பிள்ளை இராஜநாயகம் அவர்கள் 20. 06. 2002 அன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களால் மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் நானாட்டான் கிராமத்தின் 12 வது குரு என்பது குறிப்பிடத்தக்கது. 19. 04. 1969ல் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை நானாட்டான் மகா வித்தியாலயத்தில் கற்றார். உயர் நிலைக் கல்வியை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் கற்றார். 1990 ஆம் ஆண்டு யாழ். புனித மாட்டினார் சிறிய குருமடத்தில் சேர்ந்த இவர் தனது ஆங்கிலக் கல்வியை நிறைவு செய்தார். 1993 – 2001 வரையிலான காலப்பகுதியில் தனது மெய்யியல் இறையியல் கல்வியை மேற்கொண்டு மெய்யியல் கலைமாணிப் பட்டத்தையும் இறையியல் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.இவர் தனது முதல் திருப்பலியை நானாட்டான் புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தில் 21. 08. 2002 அன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஒப்புக்கொடுத்தார். பணிக்களத்தில் காலடி பதிக்கும் புதிய அருட்ப் பணியாளரை மன்னா மனதார வாழ்த்தி வரவேற்கின்றது.

வருக வருக புதிய குருவே! தருக தருக இறைவன் ஆசீர்!

### மன்னாரில் நற்செய்திப் பணியாளர்

## சகோதரர் சு.சொர்ண மாணிக்கம்

### இறைவார்த்தை மழையில் மக்கள் நனைந்தனர்



சகோதரர் சொர்ணமாணிக்கம், மனைவி நிர்மலா, மகள் ஆயிஷா காரீஸ்

தமிழ் நாட்டைச் சேர்ந்த நற்செய்திப் பணியாளர் சகோதரர் சு.சொர்ணமாணிக்கம் அவர்கள் கடந்த மாதம் 21ம் திகதி தொடக்கம் மன்னார் மறைமாவட்டத்தில் குணமளிக்கும் நற்செய்திக் கூட்டங்களை நடாத்தினார். தலைமன்னார், தாழ்வுபாடு, நானாட்டான், பேசாலை, கீளியன்குடியிருப்பு ஆகிய பங்குகளில் மாலை வேளைகளில் நற்செய்திக் கூட்டங்களை நடாத்தினார். பேசாலை பங்கில் 3 நாட்களாக காலையில் வேதபாடமும். கருத்தரங்கும் மாலையில் பொது நற்செய்தி கூட்டமும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பேசாலை பங்கின் இறைவார்த்தைக் குழுவினரே இந்த சகோதரரை அழைத்திருந்தனர். இவரும் இவருடைய மனைவி சகோதரி நிர்மலா அவர்களும் இவருடைய கடைசி மகள் ஆயிஷா காரீஸ் (7வயது) அவர்களும் நற்செய்தி கூட்டங்களில் பங்கேற்றனர். சகோதரர் சொர்ணமாணிக்கம் அவர்கள் கடந்த 20ஆண்டுகளுக்கு மேலாக இறைவார்த்தையை அறிவிக்கும் நற்செய்திக் கூட்டங்களை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் உலக நாடுகள் சிலவற்றிலும் நடாத்தி வருகிறார்.. இவர் தமிழ் நாடு கழுகுமாலை என்ற இடத்தில் அமைந்துள்ள காரிஸ் செபக்குழு உறுப்பினராக விளங்குகின்றார்.

### தள்ளாடும் வயதிலும் தணியாத பணித்தாகம்

## ஆனி 23 ந் திகதி

## திருத்தந்தையின் தினம்

* **திருத்தந்தைக்கு 82 வயது**
* **பணியேற்று 24 வருடங்கள் நிறைவு**



உலகெங்கும் வாழும் 95 கோடி கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவர் திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் தமது 82ஆவது பிறந்த நாளை மே மாதம் 18ம் திகதி கொண்டாடினார். திருத்தந்தைக்கு எமது பிறந்தநாள் வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம். 1978ம் ஆண்டு பாப்பரசராக பணியேற்று கடந்த 24 வருடங்கள் கத்தோலிக்க மக்களின் தலைவராக பணியாற்றி வரும் இவர் 1981இல் வத்திகானில் முகமது அலி அகா என்ற இளைஞனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தெய்வாதீனமாக உயிர் தப்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது. தள்ளாடும் வயதிலும் தணியாத பணித்தாகத்தோடு இருக்கும் பரிசுத்த தந்தைக்காக தொடர்ந்து செபிப்போம்.

### மதவாச்சியில் நடந்த சமாதானப் பேரணியில்

## மன்னார் மக்கள் பங்கேற்பு !

இலங்கையின் வடபகுதியையும், தென்பகுதியையும் இணைக்கும் எல்லைக் கிராமமாக அமைந்துள்ள மதவாச்சியில் சமாதானத்தை வலியுறுத்தும் வகையிலான சமாதானப் பேரணி இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு மன்னார் மறைமாவட்டத்திலிருந்தும் கத்தோலிக்க மக்கள் கலந்து கொண்டனர். வவுனியா, செட்டிகுளம், இலுப்பைக்குளம், தலைமன்னார் ஆகிய இடங்களிலிருந்து மக்கள் கலந்து கொண்டனர். சமாதான முயற்சிகளில் மிகுந்த ஆர்வமுடைய மதவாச்சிப பங்குத் தந்தை அருட்பணியாளர் அகஸ்ரின் காரியகரவண்ண அவர்கள் இந் நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தார்.

## அந்தோனியார் திருவிழா வாழ்த்துக்கள்

ஆனி மாதம் 13ம் திகதி அந்தோனியார் திருவிழா! மன்னார் மறைமாவட்டத்தில் பல ஆலயங்கள் புனித அந்தோனியாருக்கு அர்ப்பணிக்கப்பட்டவையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. புனித அந்தோனியார் திருவிழாவை கொண்டாடிய பங்குத் தந்தையர்களையும் பங்கு மக்களையும் மன்னா மனதார வாழ்த்தி நிற்கின்றது. வவுனியா, செட்டிகுளம், தட்சனாமருதமடு ஆகிய பங்குகளின் பங்குத் திருவிழாவாகவும் இந்த நாள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"உமது பேரன்பின் பெருக்கினால் எனக்கு பதில் மொழி தாரும் " (திருப்பாடல் 69: 13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பொழிவு

# பதிப்பாசிரியர் பகர்வது

வணக்கம்

## குலையும் குடும்ப வாழ்வு

குடும்பம் என்பது மனிதத்தின் பிறப்பிடம். வாழ்க்கையை வழப்படுத்த வேண்டிய சிறப்பிடம். சமூக உணர்வைச் சக்தியுடையதாக்கும் உறைவிடம். சமூக சமய நற்பண்புகளையும் ஒழுக்கத்தையும் ஆற்றுப்படுத்தும் அறிவகம். சமுதாயத்தின் சாரம். அன்பைப் பிறப்பிக்கும் சாதனம்.
குடும்பம்! மனித குல நாகரிகத்தில் உற்பத்தி தளம். ஆரோக்கியமான பால் உறவிற்கு அங்கீகரிக்கப்பட்ட களம். குடும்பம் என்றால் என்ன என்று ஐக்கிய நாடுகள் சபை இவ்வாறு வரையறை செய்கின்றது. "ஒத்த குறிக்கோளுடன் ஒரே வீட்டினுள் வசிக்கும் நபர்களின் இணைப்பே குடும்பம்".

### குடும்பத்தில் குழப்பங்கள்

இன்று குடும்ப்ங்களில் குழப்பங்கள் மலிந்து விட்டன. இன்று அனேக குடும்பங்கள் கவலையிலும் கண்ணீரிலும் தம் வாழ்நாட்களை நகர்த்துகின்றன. அமைதி இழந்த ஆன்மாக்களாக உணர்விழந்த நடைபிணங்களாக குடும்பங்களில் மனிதர்கள் வாழ்கின்றனர். குடிவெறியும் விபச்சாரமும் சந்தேக மனப்பான்மைகளும் வைராக்கிய உணர்வுகளும் இன்று குடும்ப வாழ்வை சீரளிக்கின்றன. குடும்பம் இன்று படிப்படியாக - ஆனால் படைபடையாக சிதைந்து வருகின்றது. குடும்பத்தின் அமைப்பும் வடிவமும் முதியோர் இல்லங்களாக பெண்கள் விடுதியாக அனாதை இல்லங்களாக மாறி வருகின்றது.
குடும்பங்கள் சிறப்பாக இருந்தால் சமூகக் குற்றங்கள் ஏது? அனாதை இல்லங்கள் ஏன்? முதியோர் இல்லங்கள் ஏன்? அன்னை தெரேசாக்கள் எதற்காக?
சிதையும் குடும்பங்களால் சிதறும் மனிதர்களைக் காக்க குடும்பம் சீராக இருக்க வேண்டும். இல்லறமாம் நல்லறத்திற்கு மூன்று முகங்கள் உண்டு. அவை; கணவரின் பாதுகாப்பு, மனைவியின் ஒத்துழைப்பு, குழந்தையின் பணிவு.

### கணவன் மனைவி உறவு

தேனுக்கு மலர் பாதுகாப்பு. மலருக்கு தென்றல் பாதுகாப்பு. நீருக்கு நிலம் பாதுகாப்பு - அது போல மனைவிக்கு கணவன் பாதுகாப்பு! "அவர்கள் இனி இருவரல்ல ஒரே உடல்", (மத். 19: 6) என்று கணவன் மனைவிக்கு இடையே உள்ள ஒன்றிப்பை வேதாகமம் விளக்குகிறது. குடும்ப ஒழுக்கம் பற்றி திருநூலில் புனித பவுல் இவ்வாறு கூறுகின்றார். "திருமணமான பெண்களே, உங்கள் கணவருக்கு நீங்கள் பணிந்திருங்கள். ஆண்டவரைச் சார்ந்து வாழ்வோருக்கு இதுவே தகும். திருமணமான ஆண்களே, உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள். அவர்களைக் கொடுமைப்படுத்தாதீர்கள்." (கொலோ. 3: 18 - 21)

### பிள்ளைகள் மட்டில் பெற்றோரின் பொறுப்பு

ஒரு குழுந்தையின் முதல் பள்ளி தாயின் மடி. அதன் முதல் ஆசிரியர்கள் பெற்றோர். ஒரு தகப்பன் நினைக்கின்றான் "நான் குடிப்பேன் கூத்தாடுவேன் சண்டை பிடிப்பேன் மண்டை உடைப்பேன். ஆனால் என் மகன் மட்டும் வளர்ந்து நல்லவனாக வல்லவனாக வரவேண்டும்." என்று. ஒரு தாய் நினைக்கின்றாள் "நான் ஊரெல்லாம் திரிந்து ஆவலாதி அவதூறு பேசுவேன். சண்டைக் கப்பலாக வம்பளப்பேன் ஆனால் என் மகள் மட்டும் வளர்ந்து அடக்க ஒடுக்கமாக ஊரெல்லாம் போற்றும் உத்தமியாக வரவேண்டும்." என்று. இது எப்படிப்பட்ட எதிர்ப்பார்ப்பாக இருக்க முடியும்? "பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். அப்படிச் செய்தால் அவர்கள் மனம் தளர்ந்து போவார்கள்." (கொலோ. 3: 18 - 21) "தந்தையரே உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். மாறாக அவர்களை ஆண்டவருக்கு ஏற்ற முறையில் கண்டித்து திருத்தி அறிவு புகட்டி வளர்த்து வாருங்கள்." (எபே. 6: 1-3)

"கலைகளிலெல்லாம் மிகச் சிறந்த கலை பிள்ளைகளை சிறப்பான முறையில் வளர்க்கும் கலையே" என 3ம் சிங்கராயர் என்னும் திருத்தந்தை கூறினார். குடும்பம் ஓர் அச்சு. பிள்ளை அதன் வார்ப்பு. குடும்பம் ஒரு மரம். பிள்ளை அதன் கனி. எனவே குடும்ப சூழ்நிலையைப் பொறுத்துத்தான் பின்ளைகளின் முன்னேற்றமும் பின்னேற்றமும் தங்கியுள்ளது. பெற்றோர் எவ்வழி பிள்ளைகள் அவ்வழி! தாயைப்போல பிள்ளை நூலைப் போல் சேலை! தந்தையானவர் ஒரு விளக்கின் அகலாகவும் தாய் அதில் உள்ள எண்ணையாகவும் இவர்களின் குழந்தைகள் எரியும் திரியாகவும் இருந்தால் அகல் விளக்கின் ஒளிபோல் குடும்பம் பிரகாசிக்கும் என பலஸ்தீனப் பழமொழி ஒன்று கூறுகின்றது.

### பெற்றோர் மட்டில் பிள்ளைகளின் கடமை

"பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரைச் சார்ந்தோருக்கு இதுவே தகும்." (கொலோ. 3: 18 - 21) "உன் தந்தையையும் தாயையும் மதித்து நட என்பதே வாக்குறுதியை உள்ளடக்கிய முதலாவது கட்டளை. இதனால் நீ நலம் பெறுவாய். மண்ணுலகில் நீ நீடுழி வாழ்வாய் என்பதே அவ்வாக்குறுதி". (எபே. 6: 1-3) விழுதுகள் மரங்களைப் பாதுகாப்பதுபோல் பிள்ளைகள் பெற்றோரைப் பாதுகாக்க (விழுதாக) வேண்டும்.

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை
இறையாசீர். அன்புடன்,
அருட்பணியாளர் நேசன்
பதிப்பாசிரியர்.

# ஆயர் பணியில்
## 10 ஆண்டுகள் நிறைவு

ஆடி மாதம் 6ந் திகதி மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் மன்னார் ஆயராக நியமனம் பெற்ற தினம் (1992)



ஆயர் பணியில்
10 ஆண்டுகளை
நிறைவு செய்யும்
எம் அன்பு நிறை
தந்தையே!
மன்னார்
மறைமாவட்ட
இறைமக்கள் நாம்
மகிழ்வோடு
வாழ்த்துக்
கூறுகின்றோம்.
இறையாசி
வேண்டுகிறோம்!

# ஆனி 30 ந் திகதி
## உலக சமுகத் தொடர்பு தினம்




வளர்ந்து வரும் சமுகத்தொடர்பு சாதனங்கள் மூலம்
இயேசுவின் நற்செய்தியை
அறிவிப்போம்!

*உலக சமுகத் தொடர்பு தின வாழ்த்துக்களை மன்னா வாசகர்களுக்கு அன்போடு தெரிவிக்கின்றோம்.*
பதிப்பாசிரியா

# வாசகர் எண்ணங்கள்




## மக்கள் எல்லாம் உன் பக்கம்!



'மன்னா' என்று சொன்னாலே
மக்கள் எல்லாம் உன் பக்கம்!
வாழ்க்கை என்னும் பாதையிலே
மாதம் தோறும் வந்துதிப்பாய்!
அன்பான மன்னாவே!
உனை மறவேன் நான் என்றும்!
நீ போகும் இடம் எல்லாம்
உன் பணி சிறந்தோங்க
உனை நானும் வாழ்த்துகின்றேன்.

அ. வியேஸ்வரன்
NO - 108, வீரபுரம், நேரியகுளம்.

## தரமான செய்மதி!



"கடவுள்!
பலவீனமுள்ள மனிதருடன்
தொடர்பு கொள்வதற்கு தனது
தூதர்களைத் தம் கருவியாக
பயன்படுத்துகின்றார்". அவ்வாறே
"மன்னா"
நீயும் பல மனிதருடன் தொடர்புகொண்டு
நல்ல தரமான செய்மதியாய்
மக்களிடையே வலம் வருகின்றாய்.
நீ வா! நிதம் வா!!

க. அடைக்கலம்
புனித வளனார் அ.ம.தி. குருமடம்
யாழ்ப்பாணம்.


## உங்கள் கருத்துக்கள் சுட்டிப்பாக சுருக்கமாக இருக்கிறது!

அருட்பணியாளரான பதிப்பாசிரியர் அவர்களுக்கு முதலில் எனது இதயத்தில் பொங்கி வரும் நன்றியை தங்களுக்கு கூறி நிற்கின்றேன். தாங்கள் எனது சகோதரிகளிடம் மன்னா பத்திரிகைகளைக் கொடுத்தனுப்பியிருந்தீர்கள். அழுகின்ற குழந்தைக்கு பால் கிடைத்ததுபோல் எனக்கு இது அமைந்தது.

சிறு வயது தொடக்கம் பத்திரிக்கை வாசிப்பதில் ஆர்வம் உள்ள எனக்கு அதைப்பற்றிய விமர்சனம் எழுத வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் எழவில்லை. இவ்வருடம் தை மாத மன்னா இதழ் அதிஷ்டவசமாக என் கைக்குக் கிடைத்தது. மன்னாவைக் கையில் எடுத்ததும் எனது கண்கள் சுழல் பந்தாடின. அதன் வளர்ச்சியைக் கண்டு ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினேன். உடனே இதற்கு விமர்சனம் எழுத வேண்டும் என உள்ளம் தூண்டி எழுதினேன். ஆனால் அனுப்பவில்லை.
மன்னாரில் இருந்த சில காலப்பகுதியில் மன்னாவின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது ஆனால் அது தொடர்ந்து நீடிக்கவில்லை. காரணம் மன்னாரை விட்டு நீங்கியதும் இதன் தொடர்பு நிறுத்தப்பட்டது. மீண்டும் ஐந்து வருடங்களுக்குப்பின் மன்னாவைப் பார்த்ததும் அது விருட்சம்போல் வளர்ந்து இருப்பதைக் கண்டு பெரும் மகிழ்ச்சி கொண்டேன். மன்னாவைப் பார்க்கின்றபோது மன்னார் திருச்சபையின் வளர்ச்சி பிரதிபலிக்கின்றது.
சாதாரணமாக பத்திரிகையை எடுத்ததும் முதலில் ஆசிரியர் பகுதியைத்தான் வாசிப்பேன். அதைப்போல் மன்னாவை எடுத்துப்பார்த்தபோது அதில் உங்கள் கருத்துக்கள் சுட்டிப்பாக சுருக்கமாக, காரமாக, கவரக்கூடியதாக இருக்கின்றது. மன்னாவின் அனைத்து ஆக்கங்களும் பிரமாதம! பெரியப்பா பதில்கள் சூப்பர்! மன்னாவைக் கையில் எடுத்தால் மன்னாரைச் சுற்றி வலம் வந்ததுபோல் இருக்கும்.
உங்கள் பணி தொடர்ந்து வளரவும் மன்னா விருட்சம்போல் தொடர்ந்து வாழவும் இரையாசி வேண்டி மீண்டும் எனது நன்றிதனைக் கூறி நிற்கின்றேன்.

சகோதரி கிறிஸ்ரெலா,
திருக்குடும்ப தியானயோக சபைச் சகோதரிகள்
நாகொட, கொழும்பு.

மூப்பர் குடும்பம் ..........




## புனிதர் பொன்மொழி

"பிறர் தங்கள் ஆசிரியர் யாரென்று தங்கள் நடத்தையால் காட்டுகிறார்கள். நாமோ இயேசுவை நம் ஆசிரியர் என்று நம் நடத்தையால் காட்டுவோமாக!"
- புனித கிறகோரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தினரின்

# கருச்சிதைவு பற்றிய அறிக்கை!

அண்மையில் எமது உள்ளூர் ஊடகத்துறையானது, எமது அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட "விசேட நிலைமைகளில் ஒரு குறிப்பிட்ட அளவிலும், தெரிவு செய்யப்பட்ட அடிப்படையிலும், கருச்சிதைவுக்கு அனுமதி வழங்கலாம் எனும் அரசியல் சட்ட சீர்திருத்தம் கருச்சிதைவுக்கான தடையை நீக்குகிறது" எனும் செய்தியைத் தாங்கி வந்தது. இலங்கைக் கத்தோலிக்க ஆயர் மன்றத்தினராகிய நாம் இத்தகைய சீர்திருத்த அறிக்கையின் மட்டிலான எமது ஆழ்ந்த கவலையையும், ஆட்சேபனையையும் தெரிவிக்கின்றோம். ஏனெனில் கத்தோலிக்கராகிய எமக்கு கருச்சிதைவு ஒரு அருவருக்கத்தக்க பாவச்செயல். நாம் இத்தகையதொரு கருத்தைக் கொண்டிருப்பதற்குக் காரணம் யாதெனில், எமது திடமான நம்பிக்கையின்படி மானிட உயிரானது அது உற்பவித்தது முதல் இறக்கும் வரை முழுமையான மரியாதைக்கும், பாதுகாப்புக்கும் உரியது என்பதனாலேயே. கரு உற்பத்தியாகும் அந்த நிமிடத்திலேயே மனித வாழ்வு ஆரம்பிக்கின்றது என்பதையும், அத்தகைய மனித கருவுக்கு மரியாதையையும், பாதுகாப்பையும் வேண்டி நிற்கும் மனித மாண்பு உண்டு என்பதையும் நாம் நம்புகின்றோம்.

இதன் விளைவாக இத்தகைய பிறக்காத மனித உயிர்களை அழிக்கும் கருச்சிதைவானது ஏற்றுக்கொள்ள முடியாத, ஒழுக்க சம்பந்தமான தீய செயல். எமது கத்தோலிக்க விசுவாசத்தில் இது முக்கியத்துவம் வாய்ந்ததொரு மூலகமாயிருக்கின்றது என்று கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ( 1992) எனும் நூலில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மானிட உயிர் புனிதமானது, ஏனென்றால் ஆரம்பத்திலிருந்தே இது இறைவனின் படைப்புச் செயலில் ஈடுபாடு கொண்டுள்ளதுடன் இதன் ஒரே முடிவான படைத்தவருடன் என்றும் உறவில் நிலைத்து நிற்கிறது. வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதிவரை இறைவன் மட்டுமே அந்த வாழ்வின் ஆண்டவராயிருக்கிறார். எந்த ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையிலும் மாசற்ற மானிட உயிரை அழிப்பதற்கு யாரும் உரிமை கோர முடியாது (இல. 2258). இன்று அதிகளவான கருச்சிதைவுகள் நிகழக் காரணம் கருவறையில் இருக்கும் கருவானது அது பிறக்கும்வரை அன்றேல் உற்பவித்துச் சில மாதங்கள் செல்லும் வரையிலாவது அது மனிதத்தன்மை பெறவில்லை எனும் தவறான விளக்கமேயாகும். எமது பரிசுத்த தந்தை 2ம் அருள் சின்னப்பர் தமது வாழ்க்கையின் நற்செய்தி எனும் சுற்றுமடலில் கூறுவது கரு உற்பத்தியாகத் தொடங்கிய அந்த நேரத்திலிருந்து ஒரு உயிர் ஆரம்பிக்கிறது. அது தனது சொந்த வளர்ச்சியுடன் கூடிய ஒரு புதிய மனித உயிர். இது ஏற்கனவே மனிதத்தன்மையைக் கொண்டிராவிடில், ஒரு பொழுதுமே மனிதத் தன்மை கொண்டதாய் ஆக்கப்பட முடியாது. (இல.60) மற்றுமொரு வகையில் கூறவேண்டுமானால், அது பிறப்பதற்கு முன்னரே அதாவது அது தனது தாயின் கருவறையில் இருக்கும்பொழுதே அந்தக்கரு ஒரு மனித உயிர். இத்தகைய கருத்து தற்கால மருத்துவக் கருத்துக்களாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட திருத்தச்சட்டம் தொடர்பாக, செய்தி



ஊடகங்களினால் வெளியிடப்பட்ட விடயங்கள், கலந்துரையாடல்களின்படி மிகவும் பிரசித்தமான விவாதம் யாதெனில் இத்தகைய திருத்தச்சட்டம் ஏதாகிலும் அன்றேல் ஒவ்வொரு விடயத்திலும், ஒருவரது விருப்பத்திற்கும் மனோ பாவத்திற்கும் ஏற்ப ஆதரிக்கப்படுவதில்லை. மாறாக ஒரு சில தெரிந்தெடுக்கப்பட்ட தவிர்க்க முடியாத நிலைமைகளில் மட்டுமே இது ஆதரிக்கப்படும். துரதிஷ்டவசமாக இத்தகைய விவாதம் கவனத்திலெடுக்கப்பட முடியாது. ஏனென்றால் கரு உற்பத்தியாகும்போதே ஒருவரது மனித வாழ்வு ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு மனிதக் கருவும் ஒருமனித உயிர். அதற்கு வாழும் உரிமை உண்டு என்பது இங்கு கவனத்தில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இங்கு எமது கத்தோலிக்க விசுவாசமானது இத்தகைய விவாதங்களை ஆதரிக்கும் ஏனைய பல பிரசித்திபெற்ற விசுவாசங்களிலிருந்தும், கருத்துக்களிலிருந்தும், திட்டமான விதத்தில் வேறுபடுகிறது. கத்தோலிக்கராகிய எங்களுக்கு எந்த உருவிலும் மனித உயிர் புனிதமானது. அன்றியும் அது கருவறையிலிருந்து கல்லறைவரை மரியாதைக்கும், பாதுகாப்புக்குமுரியது.

மேற்கூறப்பட்ட திருத்தச்சட்டம் தொடர்பான செய்தியறிக்கையின்படியும், அவற்றைத் தொடர்ந்து வெளிவந்த கட்டுரைகளின்படியும், இத்தகைய தெரிவுசெய்யப்பட்ட கருச்சிதைவை நியாயப்படுத்துவதற்கு முன்வைக்கப்படும் பிரதான காரணம் யாதெனில்: அதாவது பாலியல் வல்லுறவுக்கும், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் பலியாகிறவர்களில் அதிகளவானோர் தாய்மைத் தன்மையை அடையும் நிலையில் இல்லாத பிள்ளைகளே. ஏனென்றால் அவர்கள் இன்னும் பிள்ளைப் பருவத்திலேயே இருக்கின்றார்கள். இது உண்மையிலேயே சரியானதாயிருந்தாலும், இத்தகைய சமூகப் பாவங்களான பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகம் ஆகியவற்றிற்கான காரணங்களில் கவனம் செலுத்தாது சாதாரணமான வகையில் கருவை அழித்தல் என்பது அதனையும்விட மேலான பாவச் செயலாகும். பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டவரா அன்றேல் மாசற்ற கருவா நேரடியாகக் கையாளப்பட வேண்டிய தேவையிலுள்ளது என்று ஒருவர் கேட்கவேண்டும். தெரிவு செய்யப்பட்ட கருச்சிதைவுக்குச் சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்குவதற்கு அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதிலும் பார்க்க, பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகம் ஆகியவற்றின்பால் மக்களைத் தூண்டி எழுப்பி இதற்கான சமூக காரணங்களை வேரறுப்பதற்கான செயலில் இறங்குவது அதிகாரத்திலுள்ளவர்களால் தட்டிக்கழிக்க முடியாத ஒரு செயல் என்பது தெட்டத்தெளிவாகத் தெரிய வேண்டும். பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகம் போன்ற இத்தகைய துரதிஷ்டமான நிகழ்வுகளில் கருவை அழிப்பதற்குப் பதிலாகத் தாய் பிள்ளையைப் பெற்றெடுக்க வேண்டும். ஆனால் பிள்ளையை வளர்க்க அவளால் முடியாதுபோனால் அதனை வளர்ப்பதற்கான உதவியை அரசாங்கம் அன்றேல் ஏனைய தொண்டர் அமைப்புக்கள் அவளுக்கு அளிக்க வேண்டுமென்று எப்பொழுதுமே திருச்சபை கூறிவந்துள்ளது.


அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கு முன்வைக்கப்பட்ட மற்றுமொரு முக்கியமான காரணம் ஒரு தாய் தனது கரு வளர்ச்சியடையாத நிலையில் உள்ளதைக் கண்டறியும்போது அக்கருவை அழிப்பதற்கான வழிகளைத் தேடலாம் என்பது. இதுவும் எமது கத்தோலிக்க விசுவாசத்திற்கு முரணானது. ஏனென்றால் எமக்கு அனைத்து மனித உயிர்களும் அதாவது பலமானதும், பொருத்தமானதும் மட்டுமல்ல, பலவீனமானதும் ஊனமுற்றதும்கூட புனிதமானதே. சமுதாயத்தில் அதிகம் தாக்கப்பட்ட இத்தகைய தற்பாதுகாப்பற்ற மனிதக் கருக்கள், வயது முதிர்ந்தவர்கள், தளர்வுற்றவர்கள், மனநலம் குன்றியோர், உடல் ஊனமுற்றோர் யாவருக்குமே அவரவருக்குரிய மனித மாண்பு உண்டு. அவர்கள் எல்லாவிதமான மரியாதைக்கும் பாதுகாப்புக்கும் உரியவர்களே. இறுதியாக, இலங்கைக் கத்தோலிக்க ஆயர்களாகிய நாம் எந்த சூழ்நிலையிலும், கருச்சிதைவைச் சட்டரீதியானதாக்கும் எந்தவொரு முயற்சியையும் பலமாக எதிர்க்கின்றோம். அன்றியும் ஏனைய நம்பிக்கைகள், மதங்களைக் கைக்கொண்டுள்ள எமது சகோதரர், சகோதரிகளும் உயிரின் புனிதத்துவத்தைக் காப்பாற்றுவதுடன், எமது இந்தக் கரிசனையைப் பகிர்ந்து கொள்வார்கள் எனும் உறுதியான கருத்தையும் கொண்டுள்ளோம். இறைவனே உயிரின் ஊற்று. அவ்வுயிரை எடுப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை. எமது பல்வேறுபட்ட மத நம்பிக்கைகள் எத்தகையவையாயிருப்பினும் இலங்கையராகிய நாம் அனைவரும் ஒரே குடும்பத்தின் உறுப்பினர்களே. அன்றியும் பிறந்ததும், பிறக்காததுமான ஒவ்வொரு மனித உயிரையும் பாதுகாக்க வேண்டிய கடமை எம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

எமது சமுதாயத்திலுள்ள பலவீனமானவர்களையும், தாக்கப்பட்டவர்களையும் பாதுகாப்பதற்கு விசேடமாக பிறக்காத மாசற்ற மனித உயிர்களைப் பாதுகாப்பதற்கு, எம்முடன் இணைந்து செயற்பட நல்மனமுள்ள ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம். எமது பங்கைப் பொறுத்த மட்டில் கருச்சிதைவானது தெரிந்தெடுக்கப்பட்ட அடிப்படையில் நடைபெற்றால் கூட, சட்ட ரீதியான கருச்சிதைவைக் கத்தோலிக்க திருச்சபையினராகிய நாம் ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள முடியாது. ◈

### ஐந்து காய வரம் பெற்ற

# ஆசா. பாட்றே பியோ (Padre Pio) அடிகளார் புனிதராகப் பிரகடனப்படுகின்றார்!

இவ்வாண்டு ஆனி மாதம் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் அவர்கள் பியோ அடிகளாரை உரோமையில் உள்ள புனித பேதுரு சதுக்கத்தில் புனிதராக பிரகடனப்படுத்தினார். கப்புச்சின் துறவற சபையைச் சேர்ந்த அடிகளார் 1887ம் ஆண்டு மே மாதம் 25ம் திகதி பிறந்தார். 1968ம் ஆண்டு மே மாதம் 23ம் திகதி அவர் தன் வாழ்வை நிறைவு செய்து இறைவனடி சேர்ந்தார். இவர் தன் வாழ்நாட்களில் ஐம்பது வருடங்களாக இயேசுவின் ஐந்து காயங்களை தன் கரங்களிலும் கால்களிலும் தன் விலாவிலும் தாங்கி இருந்தார். இந்தக் காயங்கள் இறுதி மட்டும் ஆறாமலும் சிதல்கூட்டாமலும் இருந்தமை மருத்துவ உலகை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது. இவர் தன் வாழ்நாளில் புனித வாழ்வை வாழ்ந்தார். திருப்பலி மற்றும் அருட்சாதனங்களில் மிகுந்த பயபக்தியோடு கலந்து ஒப்புக்கொடுத்தார். மரியன்னையிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தார். ஒரு நாளைக்கு நாற்பது செபமாலைகள் செபித்து வந்தார். இவர் வாழ்நாளிலேயே ஆண்டவரின் பெயரால் பல அற்புதங்களை செய்கின்றவராக விளங்கினார். 1999ம் ஆண்டு மே 2ம் திகதி திருச்சபையில் ஆசாரத்துக்குரியவர் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார். எளிமையும் தாழ்மையும் நிறைந்த இப்புனிதரின் பரிந்துரையை நாமும் கேட்போம்.



ஆசா. பாட்றே பியோ அடிகளார்.



பியோ அடிகளாருக்கு 1999ல் உரோமையில் ஆசாரத்துக்குரியவர் என்ற பட்டம் வழங்கப்பட்டபோது கூடியிருந்த மக்கள் வெள்ளம்.



பியோ அடிகளாரினால் குணம் பெற்ற சிறுவன் திருத்தந்தையை சந்திக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பொழிவு

## சிறுவர் கதை

### புனித கிறிஸ்தோப்பரின் வாழ்க்கையில்

முன்னொரு காலத்திலே பெரஸ் (Ferus) என்னும் மனிதர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மிகவும் பலசாலியாகவும், மிகவும் உயரமானவராகவும் இருந்தார். பிறருக்கு உதவ தன் உயரமும், பலமும் பயன்படவேண்டும் எனும் எண்ணம் அவருக்குள் இருந்தது. இறைபக்தி உள்ள அவர், துறவி ஒருவரிடம் சென்று தன் எண்ணத்தைச் செயல்வடிவாக்க என்ன செய்யலாம் என்று கேட்டார். அதற்கு அந்தத் துறவி "அந்தப் பாலம் இல்லாத காட்டாற்றின் அக்கரையில் உள்ள தேவாலயத்துக்குச் செல்பவர்களை உன் தோளில் தூக்கிச் சென்று இறக்கிவிடு. மீண்டும் சுமந்து வந்து இக்கரையில் இறக்கிவிடு" என்று கூறினார். பெரஸ் அன்றே அதனை செயல்வடிவாக்கத் தொடங்கினார். இரவு, பகல், வெயில், மழை என்று பாராது அப்பணியைச் செய்து வந்தார்.



அது ஒரு இரவு வேளை. கடும் புயல் வீசிக்கொண்டிருந்தது. பெரஸ் சிறுவன் ஒருவனைச் சுமந்தபடி ஆற்றைக் கடக்கின்றார். நீர்மட்டம் உயர்ந்தது. தோள்மீது பாரம் அதிகரித்தது. களைத்துக் கீழே விழப்போன பெரஸை இரு கரங்கள் இழுத்துக் கரை சேர்த்தன. நிமிர்ந்து பார்த்த பெரஸிக்கு ஆச்சரியம்! தோளில் சுமந்து வந்த சிறுவன் முழு மனித உருவில் தலையைச் சுற்றிலும் பிரகாசத்துடன் நின்றார். பெரஸ் வியப்புடன் "முழு உலகத்தையுமா என் தோள்களில் தூக்கிக்கொண்டு ஆற்றைக் கடந்தேன்? அவ்வளவு பாரமாக இருந்ததே" என்று கேட்க, "நீ முழு உலகத்தை மட்டுமல்ல என்னையும் சேர்த்துத்தான் உன் தோள்களில் தூக்கி வந்தாய். உன்னையும், உன் சேவையையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். கிறிஸ்துவாகிய (Christ) என்னை உனது தோளில் தூக்கிச் சுமந்ததால் (Bear) இனி உன் பெயர் பெரஸ் இல்லை. இனி உன் பெயர் கிறைஸ்ட் பெயாரர் (Christ Bearer) என்பதாகும்" என்று இறைமகன் இயேசு கூறி ஆசிர்வதித்து மறைந்தார். அந்த மாமனிதர்தான் பின்னாளில் - ஏன் இந்நாளிலும்கூட புனித கிறிஸ்டோபர் (St. Christopher) எனும் பெயரால் அழைக்கப்பட்டவர்.

தா. சகாய நிரோஷினி கோமஸ்,
தரம் 7, மன் / புனித மரியாள்
பெண்கள் பாடசாலை, பேசாலை.

## சிறுவர் தொடர் கதை

### புனித லொயலா இஞ்ஞாசியார்

அங்கம் 13



49. இஞ்ஞாசியார் இறைவன்மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தார். கிறிஸ்து பிறப்பதற்கு முந்தின நாள் இஞ்ஞாசியார் உரோமைப் பயிற்சி பள்ளியின் தலைவரிடம், "கிறிஸ்து பிறப்பு விழாவன்று இளைஞர்களுக்கு அருமையான இனிப்புப் பதார்த்தம் வழங்க வேண்டும்" எனக் கூறினார். "ரொட்டி வாங்குவதற்குக்கூடப் போதுமான பணம் இல்லையே! இனிப்புப் பொருள் வாங்க ஏது பணம்" எனத் தலைவர் இஞ்ஞாசியாரிடம் கூறினார். அதற்கு இஞ்ஞாசியார், "கடவுள் மீது நம்பிக்கை வையுங்கள். நல்ல உணவு கொடுங்கள்" என்று கூறினார்.

50. மற்றொருநாள் இஞ்ஞாசியார் உரோமையில் மற்றொரு கல்லூரியைப் பார்வையிடச் சென்றார். அறைகளை எல்லாம் பார்த்துவிட்டு மாணவர்கள் தூங்கும் இடத்திற்குச் சென்றார். அப்பொழுது மேற்கூரை உடைந்து கிடந்ததையும், அதன் வழியாக குளிர் காற்று வீசுவதையும் மழைத்துளிகள் படுக்கை மீது சிதறுவதையும் கண்டார்.

51. கல்லூரிப் பொறுப்பாளரிடம் உடனே அதைப் பழுது பார்க்கும்படி கூறினார். அதற்கு பொறுப்பாளர் தன்னிடம் பணம் இல்லை என்றும் ஏற்கெனவே கடன்பட்டிருக்கிறதாகவும் கூறினார். ஆனால் இஞ்ஞாசியாரோ உடனே பழுதுபார்க்கும் வேலையை ஆரம்பிக்கச் சொன்னார். "கடவுளிடம் இந்தக் கூரையை பழுது பார்க்கப் பணம் இல்லையா? கண்டிப்பாக அவரிடம் உண்டு" எனக் கூறினார். மேலும் சிறிது நாட்களில் எதிர்பாராத விதமாக பணமும் வந்து சேர்ந்தது.

52. ஒரு நாள் இஞ்ஞாசியார் ஒரு வீட்டில் தன் நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்தார். திடீரென ஒருவன் உள்ளே வந்து இஞ்ஞாசியாருக்கு மட்டும் கேட்கின்ற விதமாய் ஏதோ முணுமுணுத்துச் சென்றான். அதைக் கேட்டபின் அந்த மனிதனிடம் 'சரி நீ போகலாம்' என்று சொல்லிவிட்டு அந்த நண்பனோடு தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். (தொடரும்)

## சிரிப் 'பூ' க்கள்



கமலா: "என்னடி சமையல் அறையில எல்லா டப்பா மேலேயும் கடுகு, சீனி என்று எழுதி ஒட்டியிருக்கே! நீ ஊரில் இல்லாதபோது உன் புருசன் அடையாளம் கண்டு கொள்ளவா...?"
நிமலா: "இல்லேடி.... அவர் ஊரில் இல்லாதபோது, நான் அடையாளம் கண்டு கொள்ள...!"

***

மகன்: "அம்மா, பத்து முட்டையில் எட்டுப்போக மீதி எத்தனையம்மா?
தாய்: "ரெண்டு முட்டைடா கண்ணா......!"
"எட்டு முட்டை கீழே விழுந்து உடைஞ்சிட்டுதம்மா! இந்தாங்க மீதி ரெண்டு முட்டை....."

***

ஒருவர்: "அந்தப் பிச்சைக்காரன் தொழிலுக்குப் புதுசுன்னு எப்படிக் கண்டு பிடிச்சீங்க...?"
மற்றவர்: "ஒரு ருபா போட்டேன் ... பேசாம வாங்கிட்டுப் போறானே... !"

டொமிற்றா, தலைமன்னார் கிராமம்,
தலைமன்னாா.

மாணவன்: "சேர்... எனக்கும் இந்த நாடகத்துல ஒரு பாத்திரம் தாங்க....."
மாஸ்டர்: "அடியே ராசமணி, அந்தக் கஞ்சிப் பாத்திரத்த எடுத்துக் குடு."

***

ரகு: "அடேட.. எங்க வீட்டு ரி. வி யில எல்லா ஸ்ரேசனும் பிடிக்குதடா."
விமல் : "அடேட..! அப்ப பொலிஸ் ஸ்ரேசன் பிடிச்சுதாடா..!."

***

மகன்: "அப்பா எனக்கு தலையை சுற்றுதப்பா."
அப்பா: "அடேட.. தலை சுற்றினால் என்னடா எல்லாப் பக்கமும் எல்லாவற்றையும் பார்க்கலாந்தான்டா."

சூ. சுதர்சன் பீரிஸ், தரம் 1C, பேசாலை.

***

ஒருவர்: "இந்த செய்தித்தாளை கரண்ட் இல்லாட்டி படிக்க முடியாது போலிருக்கே"
மற்றவர்: ஏன்?
ஒருவர்: "கரண்ட் நியுஸ் மட்டும்தான் வருதாம்!"

***

ஒரு மாணவன்: "அவனுக்கு ரொம்ப தமிழ்ப்பற்று"
மற்ற மாணவன: "எப்படி சொல்றா"
ஒரு மாணவன்: "அதுக்காக ஆங்கில பரீட்சையைக்கூட தமிழ்ல எழுத வேணும் என்று பிடிவாதம் செஞ்சா எப்படி.."

***

ஒருவர்: "ஒரு மணி நேரத்துக்கு எத்தனை நிம்சமடா?"
மற்றவர்: "படிக்கும் போதா? விளையாடும் போதா?"

ஜோ. தர்சன் பீரிஸ், தரம் 8. தாழ்வுபாடு, மன்னார்.

## கவிதைப் பூக்கள்

### எல்லாம் இயேசுவே

அன்பராம் இன்பப்
 பெருவெள்ளம் - யேசு
ஆருயிர் அளித்திடும்
 அண்ணல் - யேசு
இன்னல்கள் போக்கிடும்
 இறைவன் - யேசு
ஈனப் பாவியை மீட்க
 மரித்தவர்!
உள்ளத்தில் உறைய
 உயிர்த்தெழுந்தவர்!
ஊக்கமளித்து
 ஆக்கமளிப்பவர்!
எல்லாம் படைத்த
 பரம்பொருள் - யேசு
ஏழையின் தோழன்
 ஏகபரன் - யேசு
ஒப்பற்ற ஒளிதரும்
 விண்ணவர் - யேசு
ஐய மகற்றி
 ஆர்வம் அருள்பவர்!
ஒப்பற்ற ஒளிதரும்
 விண்ணவர் - யேசு
ஓயா இன்பம்
 ஒருங்கே அளிப்பவர்!
ஔடதம் போன்ற
 அறிவுரை ஈன்றவர்!
எ்.கென உறுதி
 வாக்களித்தவர்!

எஸ். டயானா
தி. கு. க. மடம், மன்னார்.



### அப்பா

அப்பா என் அப்பா
ஆனந்தம் தரும் அப்பா
இதயத்தில் நிறைந்த அப்பா
ஈடில்லா அன்பு அப்பா
உங்களைப் போல
ஊரிலே யாரும் இல்லை!
என்னை உயர்த்திடவே
ஏணியாய் நின்ற அப்பா
ஐயம் நீங்க எனக்கு
ஒழுக்கம் தந்த அப்பா
ஓடம் ஓட்டியதால்
ஔவை கன்னமான அப்பா

சா. மேரி குயின்சி
மொறாயஸ், தரம் - 7
அரிப்பு, முருங்கன்.

## நான் என்ன செய்கின்றேன்

நான் காலை எழுந்து காலைக் கடன்களை முடித்து விட்டு பாடசாலை செல்ல ஆயத்தமாகி பாடசாலை சென்றேன். அங்கு கற்றுத்தந்த பாடங்கள் யாவையும் கற்று முடித்த பின் பாடசாலை முடிந்தது. பாடசாலை விட்டதும் நான் வீடு திரும்பினேன். வீட்டுக்கு வந்து மதிய உணவை உண்டு விட்டு மாலை நேரம் சற்று விளையாடினேன். பின்பு வீடு வந்து சற்றுநேரம் பாடம் படித்துவிட்டு இரவு உணவையும் உண்டு முடித்தபின் படுக்கைக்குச் சென்றேன்.

படுக்கையில் நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குள்ளே யோசித்து விட்டு மன்னாவைப் பார்ப்போம் என்று மன்னாவைப் பார்த்தேன். மன்னாவில் சிறுகதைகள் கவிதைகள் இன்னும் பல கருத்துக்கள் மிகுந்த நல்ல நல்ல விடயங்கள் இருந்தன. அதைப் பார்த்த எனக்கு நானும் எழுத வேண்டுமென்ற ஆசை மனதைத் தூண்டியது. ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்குடன் நானும் மன்னாவுக்கு சிறுகதை ஒன்று எழுதினேன். பின்பு வாசித்துப் பார்த்து விட்டு மன்னாவை மடித்து மேசையில் வைத்தேன். விளக்கை அணைத்தேன். தூக்கம் வந்தது. தூங்கினேன்.

தே. ஜெயமலர், மடுக்கோவில், மடு.

## ஒரு இறைவார்த்தை ஒரு புனிதரை உருவாக்கியது!

கி.பி. 1506ல் ஸ்பெயினில் உள்ள நவார் என்னும் பட்டணத்தில் பிரான்சிஸ் சேவியர் பிறந்தார். இவருடைய தந்தை யோவான்டி சூசையும் தாய் தொன் மரியாளும் உயர் குடும்ப செல்வந்தர்கள். உயர் குடும்பத்தில் பிறந்த இவர் சிறுபராயம் தொட்டு கல்வியில் ஆர்வம் மிகுந்தவராகக் காணப்பட்டார். பாரீஸ் நகரிலுள்ள புனித பார்பரா வித்தியாலயத்திற்கு அனுப்பப்பட்ட இவர் ஆசிரியர்களுக்கு கீழ்ப்படிந்து மிகவும் ஆர்வமாகக் கற்றார். பட்டம் பெற்று தத்துவ ஞானம் சம்மந்தமான சிறந்த ஆசிரியரானார்.

இளைஞனான பிரான்சிஸ் அகங்காரத்துடன் உலகப் பெருமையையும் மதிப்பையும் பெறும் நோக்குடன் உயர் மட்ட நண்பர்களோடு தொடர்புகொண்டார். இருந்தபோதிலும் இக்னேசியஸ் லொயலாவுடன் தொடர்பு கொண்டதால் அவரது வாழ்விலே மாற்றம் ஏற்பட்டது. ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக்கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்தால் அவனுக்கு என்ன பயன்? என்ற வார்த்தையை இக்னேசியஸ் லொயலா இவருக்கு அடிக்கடி ஞாபக மூட்டி தீய நண்பர்களிடமிருந்து அவர் காப்பாற்றப்பட அவருக்கு அறிவுரை வழங்கினார். இவ்வார்த்தைகள் பிரான்சிஸ் சேவியரின் உள்ளத்தில் ஆழமாக பதிய அவர் ஆங்காரத்தையும், ஆடம்பரத்தையும் கைவிட்டு இயேசு சபையில் சேர்ந்து குருவானார். காலையில் திருப்பலி நிறைவேற்றியவுடன் வைத்தியசாலை நோயாளிகளையும் சிறைச்சாலை கைதிகளையும் தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டார். ஏழை எளியவர்களுக்கு உதவி செய்வதிலும் திருமறையைக் கற்பிப்பதிலும், கற்பதிலும் காலத்தை செலவழித்த இவர் ஆசியாவிற்கு கிறிஸ்தவத்தை பரப்பியதில் முக்கிய பங்கு வகிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழமைவு இறையியல் ........... சூழமைவு இறையியல் ........... சூழமைவு இறையியல் ...........

# எல்லை கடந்த சீடத்துவம்

## (Cross – border Discipleship )

### (புதிய மிலேனியத்தில் துறவியர் பற்றிய பார்வை)

ஸ்ரனி அன்ரனி (OMI) உரோமை

பொதுவாக சீடத்துவம் என்பது ஒருவரைப்பின்பற்றி வாழ்வதையே குறித்து நிற்கின்றது. சாதாரண வழக்கில் ஒருவருடைய கொள்கைகளை, இலட்சியங்களை மையமாக வைத்து வாழும் ஒரு வாழ்க்கை (life - style ) முறையாகும். இத்தகைய பின்னணியில் ஒரு குறிப்பிட்ட தலைவரின்கீழ் தங்கள் இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லும் ஒரு அர்ப்பணமான வாழ்வு என்றுகூடச் சொல்லலாம். இலட்சியத்திற்காக உயிரையே தியாகம் செய்யும் போராளிகள்கூட ஒரு விதத்தில் ஒரு தீவிரமான (radical) சீடத்துவத்தை - ஒரு அரசியல் அல்லது சமூக விடுதலைக்காக முன்னெடுத்துச் செல்லும் ஒரு வாழ்க்கை முறையை வாழ்வாக்கி வாழுகின்றார்கள் என்று கருத இடமுண்டு. இது ஒரு தனிப்பட்ட மனிதரை மையப்படுத்தி (hero worship) வாழும், அர்ப்பணித்து வாழும் வாழ்க்கை முறையல்ல. மாறாக அவரின் வழிநடத்தலில் ஓர் உயரிய இலட்சியத்தை எட்ட முனையும் ஒரு போராட்ட வாழ்வாகும். இலங்கையில் இன்று நடைபெறும் போராட்ட பின்னணியில் துறவியரின் வாழ்க்கையை நோக்குதல் காலத்தின் கட்டாயமாகும்.

வெளிநாட்டு துறவிகளாலேயே இலங்கையில் கிறிஸ்தவம் நுழைந்தது என்பது வரலாற்று உண்மை. அத்துடன் காலனித்துவ அதிகாரத்தின் கீழ் அது வேரூன்றியதும் வரலாற்றின் பதிவேடுகளாகும். குறிப்பாக துறவியரையும், மறைமாவட்ட குருக்களையும், அவர்களின் பணிகளையும், இருப்புகளையும், விளங்கிக்கொள்வது முக்கியமானதாகும். ஏனெனில் பொதுவாக இலங்கையில் துறவிகள் மத்தியில் பெரும்பாலானவர்கள் துறவிக் குருக்களாகவே பணிபுரிகின்றனர். புனித சூசையப்பர் துறவற சகோதரர்கள், டிலாசால் சகோதரர்கள், பிரான்சிஸ்கன் சபை சகோதரர்கள், செபமாலைதாசர் சகோதரர்கள் என்று சிறிய அளவில்தான் துறவறசபை சகோதரர்கள் குறிப்பாக இளைஞர் மத்தியிலே பணிபுரிகின்றார்கள். "எல்லோரும் குருக்கள்தானே! துறவியருக்கும் மறைமாவட்ட குருக்களுக்குமிடையே வேறுபாடுகள் இல்லையே! நாம் எத்தகைய வேறுபாட்டையும் காணவில்லையே" என்று பொதுவாக மக்கள் சொல்வதுண்டு. எந்தவொரு வாழ்விற்கும் அடையாளம் (identity) முக்கியமானது. இதன் அடிப்படையில் குருக்களையும் துறவியரையும் வேறுபடுத்திப் பார்ப்பது முக்கியமல்ல, மாறாக துறவியரின் இருப்பும், பணியும், வாழ்க்கை முறையும் இன்று இலங்கையில் நிலவும் சூழலில் எப்படி வெளிப்படுத்தப்படவேண்டும் என்பதே முக்கியமானது.

> "துறவியரின் இருப்பும், பணியும், வாழ்க்கை முறையும் இன்று இலங்கையில் நிலவும் சூழலில் எப்படி வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதே முக்கியமானது."

துறவற வாழ்வின் ஊற்றிற்கு திரும்பும்போது திருச்சபை வரலாற்றில் உலகத்தை தவிர்த்து (fuga mundi) ஒதுக்கமாக, தனியாக, கூட்டாக வாழும் வாழ்க்கை முறையே புனிதத்திற்கான அடித்தளமாக கருதப்பட்டது. உலகம் தீயது என்றும், அதிலிருந்து தப்பி வாழுதலே (escapism) இறைவனை அடைவதற்கான வழி என்று கருதப்பட்டு - நாளடைவில் கிறிஸ்துவின் ஏழ்மை, விரத்தத்துவம், கீழ்ப்படிதல் ஆகிய பண்புகளை மையமாக வைத்து வாழும் வாழ்க்கை முறையாக மாறியது. கிறிஸ்துவை தீவிரமான முறையில் (radical disipleship) பின்பற்றும் ஒரு சீடத்துவ அர்ப்பணிப்பாகவே துறவற வாழ்வு இன்று நோக்கப்படுகின்றது. இந்த வாழ்க்கை முறையை துறவியர் பகிரங்கமாக தமது ஏழ்மை, விரத்தத்துவம், கீழ்ப்படிதல் ஆகிய மூன்று வார்த்தைப்பாடுகள் (vows) மூலமாக தங்களை அர்ப்பணிப்பதே துறவியரின் அடையாளமாகும். இதுவே மறைமாவட்ட குருக்களிலிருந்து அடையாள ரீதியாக அவர்களை வேறுபடுத்தி காட்டுகின்றது. இன்று இலங்கையில் துறவறவாழ்வு மடங்களின் சுவர்களுக்குள்ளோ அல்லது துறவியரின் கூட்டு வாழ்வு அமைப்பினுள்ளோ முடங்கிவிடும் வாழ்க்கையாக அமைய முடியாது. இன்று சமூகத்திலே எழுந்துள்ள பிரச்சினைகள், சவால்கள், துறவியரை பாதுகாப்பாக வாழும் மடங்களை- கூட்டு வாழ்க்கை இல்லங்களை கடந்த ஒரு வாழ்விற்கு அழைப்பு விடுக்கின்றது. இது ஒரு விதத்தில் துறவியரின் இருப்பிற்கு சவால் விடுவதைப் போன்றதாகும். ஒவ்வொரு துறவற சபைகளும் தங்களுடைய நிறுவுனருடைய அருங்கொடைக்கேற்ப வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்கிறார்கள். இன்று இலங்கையில் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட புதிய முகம் கொண்ட ஏழைகள் துறவியரின் வாழ்விற்கு சவாலாக உள்ளார்கள். இத்தகைய ஏழைகள் வாழும் சூழல் துறவியரின் பணிக்களமாக மாறும்போதுதான் அவர்களின் ஏழ்மை என்ற துறவற வார்த்தைப்பாட்டிற்கு அர்த்தம் பிறக்க முடியும். இதன் மூலம் துறவற வாழ்வு புதிய பரிணாமங்களில் வெளிப்பட முடியும்.



கிறிஸ்துவைப் பின்பற்றி வாழும் தீவிரமான சீடத்துவத்தை எப்படி எமது மண்ணிலே வாழலாம் என்பதை சிந்திக்க துறவியர் இன்று அழைக்கப்பட்டுள்ளார்கள். இன்று தமிழ் மண்ணிலே அர்ப்பணிப்புடன், சவால்கள் மத்தியில் வாழும் போராளிகள் கூட இன்று துறவியருக்கு சவாலாக உள்ளார்கள். எமது தமிழ் சமூகத்தில் போரின் அனர்த்தத்தினால் எழுந்துள்ள சவால்கள் மத்தியில் துறவியர் எவ்விதம் கிறிஸ்துவிற்கு சாட்சியம் பகர முடியும் என்பதே கேள்வியாகும். யுத்த சூழலிலே, அகதி முகாம்கள் மத்தியிலே மாடிக்கட்டிடங்கள் அமைத்து, அதனுள் வாழ்ந்து கொண்டு இயேசுவையும் அவரின் நற்செய்தியையும் பறைசாற்ற முடியாது. பாதுகாப்பான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு ஏழைகளுக்கு பண உதவி செய்து தம் இருப்பை நியாயப்படுத்திக்கொள்வதும் துறவியரின் சீடத்துவ வாழ்வாக அமைய முடியாது. அடிப்படையில் துறவற வாழ்க்கையில் இன்று ஒரு ஆழமான புதுப்பித்தல் தேவைப்படுக்கிறது. இது துறவியர் வாழும் சமூகச் சூழலை பிரதிபலிக்கும் புதுப்பித்தலாகவே அமைய முடியும்.
உள்நாட்டுப்போர் தமிழ் மண்ணிலே பல தரப்பட்ட தாக்கங்களை உடல் ரீதியாக, உளரீதியாக, சமூகரீதியாக தோற்றுவித்துள்ளது. இதனால் துறவியரும் ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அடிப்படையில் துறவற வாழ்வின் இயல்பும் இருப்பும் இரு முகங்களைக் கொண்டது. ஒன்று இறைவனுடனான ஆழமான உறவும், மற்றது அடுத்தவருடனான ஆழமான உறவுமாகும். இத்தகைய ஒரு அடித்தளத்தில்தான் துறவற வாழ்வு கட்டியெழுப்பப்படுதல் வேண்டும். உண்மையில் திருமுழுக்கு அர்ப்பணத்தை ஆழப்படுத்தி இறைவனுடனும் அயலவருடனும் அன்பு சார்ந்த வாழ்வு வாழும் உறவு நிலையாகும். ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று மடங்களுக்குள்ளும், துறவற இல்லங்களுக்குள்ளும் முடங்கி வாழும் இறை - துறவற ஆன்மீகமானது சமூகத்தில் இயேசுவின் இறையரசை கட்டியெழுப்பும்போதுதான் முழுமை அடைகின்றது. இதனால் இசைவாக்கமுள்ள ஆன்மீகம் (integral spirituality) தேவைப்படுகின்றது. தமிழ் மண்ணிலே துறவியரின் ஆன்மீகம் சமூகச் சூழலிலிருந்தே தொடங்க வேண்டும்.

> "யுத்த சூழலிலே, அகதி முகாம்கள் மத்தியிலே மாடிக்கட்டிடங்கள் அமைத்து, அதனுள் வாழ்ந்து கொண்டு இயேசுவையும் அவரின் நற்செய்தியையும் பறைசாற்ற முடியாது."

மக்களின் துன்பங்கள், துயரங்கள் துறவியரின் வாழ்க்கை முறையிலே பிரதிபலிக்க வேண்டும். ஒரு விதத்தில் இயேசுவை தீவிரமாக பின்பற்றும் சீடத்துவத்திற்கான அழைப்பை திங்கள் வாழும் பாதுகாப்பான சூழலை கடந்து வாழும் வாழ்க்கை முறைகளிலே வெளிப்படுத்த வேண்டும். இது ஒரு எல்லை கடந்த சீடத்துவத்திற்கான அழைப்பாகும்.

துறவியர் தங்களின் பாதுகாப்பு அரண்களை விட்டு வெளியேறி அகதிகளாய் போரினால் துன்புறும் மக்களின் விடிவிற்காய் இறையரசின் விழுமியங்களுக்கு சாட்சி பகரும் வாழ்விற்கு திரும்புவதற்கான அழைப்பாகும். இத்தகைய அழைப்பை ஏற்கும்போது சிலவற்றை இழக்கவும், வாழ்க்கை முறைகளை மாற்றவும் வேண்டிய தேவை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். இன்று துறவியரின் ஆன்மீகம் தமிழ் மண்ணின் போர்ச்சூழலிலே வேரூன்ற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

தமிழ்த் துறவியரின் ஆன்மீகம் இன்று அவர்கள் எதிர் கொள்ளும் சூழலிலே மாறுபடவேண்டியது தவிர்க்க முடியாததாகும். போரினால் பாதிக்கப்பட்ட கட்டிடங்களை விட மனங்களே அதிகமாகும். எனவே துறவிகள் வாழும் குழு வாழ்க்கை உண்மைத்தன்மை (genuiness) உள்ளதாகவும் அன்பு சார்ந்ததாகவும் அமைதல் இன்றியமையாததாகும். குழு வாழ்வில் சகோதரத்துவ வாழ்வு புரிந்துணர்விலும், மன்னிப்பிலும் உறுதிப்படுத்துதலிலும் கட்டியெழுப்பப்படுதல் அவசியமாகும். குழு வாழ்விலே ஏற்படும் உள்வீட்டு முரண்பாடுகள் தாம் வாழும் சமூகத்திலே நற்செய்திக்கு எதிரான சாட்சியத்தையே கொடுக்கக்கூடியது. குறிப்பாக போரினால் பிளவுபட்டு, பகைமை, பழிவாங்குதல் போன்ற உணர்வுகளோடு வாழும் சூழலிலே மன்னிப்பின், ஒப்புரவின், அன்பின் அடையாளங்களாக தமிழ்த் துறவியர் வாழ வேண்டியது காலத்தின் தேவையாகும். இதன் மூலமாகவே தமிழ் மக்களை ஆற்றுப்படுத்தி அமைதியான நிறைவான வாழ்விற்கு இட்டுச்செல்லும் கருவிகளாக செயற்பட முடியும். மடங்கள், துறவற இல்லங்கள் தமிழ் ஏழைகளுக்கு நேசக்கரம் நீட்டும் புகலிடங்களாக (Houses of friendship) மாற வேண்டும். துன்புறுகின்ற எந்தவொரு சகோதரனும், சகோதரியும், துறவியரின் இல்லத்தை அணுகக்கூடிய விதத்தில் துறவற மடங்களின் வாசல்கள் அகல திறக்கப்படுதல் வேண்டும். குறிப்பாக துறவியரின் இதய வாசல்கள், ஏழைகளின் கூக்குரலுக்கும், துயரத்திற்கும் மூடப்படாது பேணுதல் தீவிரமான சீடத்துவத்தின் உள்ளீடாகும்.

குழுவாழ்வு வெறுமனே சில தனிப்பட்ட நபர்கள் ஒரு பணிக்காக சேர்ந்து வாழும் விடுதி (Hostel life) வாழ்க்கை முறையை ஒத்ததல்ல. மாறாக ஆழமான. சகோதரத்துவ வாழ்வு பணிவிடைபுரிதலை மையமாகக் கொண்டு வாழப்படவேண்டிய வாழ்க்கையாகும். துறவற வாழ்வின் அதிகாரம் பணியை அடிப்படையாகக் கொண்டு அ!மைதல் அவசியமாகும். சில வேளைகளில் அதிகாரத்தை பிரயோகிப்பதில் பணியைவிட கட்டுப்படுத்தி வாழும் மனநிலையே காணப்படுகின்றது. அத்துடன் அதிகாரத் தேர்வுகளிலும் அரசியல் புகுந்து விளையாடுகின்றது. மகாத்மா காந்தி ஆன்மீகத்தலைவர்களின் மனங்களிலே அரசியல்வாதிகளின் அணுகு முறைகள் காணப்படுவதாக குறிப்பிட்டார். அரசியல் கலப்பற்ற தலைமைத்துவமே ஒரு துறவற சபையை இயேசுவின் மனநிலையில் இறையரசை கட்டியெழுப்பும்

> "துறவற வாழ்வின் அதிகாரம் பணியை அடிப்படையாகக் கொண்டு அமைதல் அவசியமாகும்.சில வேளைகளில் அதிகாரத்தை பிரயோகிப்பதில் பணியைவிட கட்டுப்படுத்தி வாழும் மனநிலையே மேலோங்குகிறது."

பணியில் வழி நடத்த முடியும்.
தமிழ்த் துறவியரை பொறுத்தமட்டில் இறைவாக்கினரைப் போன்று செயற்படுதல் இன்றைய போர்ச்சூழலிலே தவிர்க்க முடியாததாகும். இத்தகைய பணியில் ஆயர்களுடன் இணைந்து செயற்படுதல் அவசியமாகின்றது. தமிழ் மண்ணில் அரங்கேறிவரும் அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல்கொடுப்பது நற்செய்தியை சமூக நீதியின் அடிப்படையில் வாழ்வதற்கான அழைப்பேயாகும். வெறும் சர்வமத யாத்திரைகள், அறிக்கைகள் மட்டுமன்றி குறிப்பாக பொதுநிலையினர் மத்தியில் திருச்சபையின் சமூகக் கோட்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த துறவியர் முன்வருதல் அவசியமாகும். அத்துடன் சமூகத்தின்மட்டில் திருமுழுக்கின் விளைவாக ஏற்பட்டுள்ள இறைவாக்கினர் பணியை முன்னெடுத்துச்செல்ல வேண்டியது ஒவ்வொரு கிறிஸ்தவனின் பணியாகும். கட்சி அரசியல் கடந்த மனித உரிமைச் செயற்பாடுகளில் தமிழ் துறவியர் ஈடுப்டுதல் இன்றியமையாததாகும். இத்தகைய நீதிக்கும் சமத்துவதற்குமான "பணி நற்செய்தி அறிவிப்பு பணியின் முக்கிய கூறு என்பதை துறவியர் உணருதல் அவசியம். அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்காக இறையரசு விழுமியங்களின் அடித்தளத்தில் ஏனைய மதத்தினருடன் இணைந்து செயற்படுதல் எல்லை கடந்த சீடத்துவத்திற்கே வழி கோலுகின்றது. மதம், திருச்சபை அமைப்பு கடந்து ஏனைய மதச்சகோதரர்களோடு கரம் கோர்த்து நீதிக்கும் அமைதிக்கும் சுதந்திர வாழ்விற்கும் உழைத்தலே எல்லை கடந்த சீடத்துவமாகும். அமைப்பு ரீதியிலான திருச்சபை எல்லையை (institutional church) கடந்து இயேசுவின் சீடத்துவத்தை வாழுதல் இன்றைய தமிழ்த் துறவியருக்கான அறைகூவலாகும். தமிழ் மண்ணில் இறையரசை மலரச் செய்யும் பணியில் தமிழ் துறவியர் தமது அர்ப்பண வாழ்வை காலத்தின் குறிகளின் ஒளியில் ஆய்ந்து பார்க்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபைச் சட்டவியல் ..... திருச்சபைச் சட்டவியல் .... திருச்சபைச் சட்டவியல்....

# திருச்சபைச் சட்டத்தில் இறைமக்கள்

அருட்பணியாளர்
தேவறாஜா கொடுதோர்,
மன்னார் மறைமாவட்ட சட்ட முதன்மைக் குரு



## சட்டங்கள் தேவையா?

அன்பின் சமூகமான - ஆவியின் இயக்கமான திருச்சபைக்கு சட்டங்கள் தேவையா? என்று சிலர் கேட்கின்றனர். இயேசு கிறிஸ்து சட்டங்களை அழிக்கவில்லை, மாறாக அவற்றை நிறைவேற்றினார்.

பவுல் அடியார் "மோசே சட்டத்தால் அல்ல இயேசுவின் மேல் கொண்ட விசுவாசத்தினாலேயே மனிதர் மீட்படைகின்றனர்". என்பதை ஆணித்தரமாகப் போதித்தார். (உரோ 3:28, கலா 2:16) இருப்பினும் அவர் பத்துக் கட்டளையின் தேவையை மறுக்கவில்லை (உரோ.13:8-10). தங்களது ஒழுக்கக்கேட்டினால் திருச்சபையில் இடறலை உருவாக்கியவர்களைத் திருச்சபையில் இருந்து தள்ளிவைக்கவும் அவர் தயங்கவில்லை (1கொரி 5: 1-5). இவ்வாறு சட்டமும் ஒழுங்கும் இன்றியமையாதவை என்பதைப் பவுல் அடிகளார் உறுதியாக நிலைநாட்டினார்.

சட்டம் இல்லை என்றால் சமுதாயத்தில் குழப்பமே மிஞ்சும். ஆனால் "கடவுள் குழப்பத்தை ஏற்படுத்துபவர் அல்ல அமைதியை ஏற்படுத்துபவர்" (1கொரி 14:33) "அனைத்தும் பாங்காகவும் ஒழுங்காகவும் நடைபெற வேண்டும்" (1 கொரி. 14:40).

ஆவியின் திருச்சபை வேறு - நிறுவனத் திருச்சபை வேறு என்று கூறுவது அப்பட்டமான தவறாகும். கிறிஸ்துவின் மறையுடலாம் திருச்சபை காணக்கூடிய அமைப்பைக் கொண்டு நிறுவப்பட்ட சமூகம் என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் விளக்கியுள்ளது. (திருச்சபை எண்:8)

திருச்சபையில் ஆவிக்கும் நிறுவனத்துக்குமுள்ள பிரிக்கமுடியாத தொடர்பைப்பற்றி திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் பின்வருமாறு கூறினார். எல்லா விதமான நிறுவன மற்றும் சட்டக்கூறுகள் புனிதமானவை: ஆன்மீகத் தன்மை கொண்டவை. ஏனெனில் அவை ஆவியால் இயக்கப்படுகின்றன. உண்மையில் ஆவியும் சட்டமும் ஒரே மூலத்தில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆவியின் கூறு அறுதியானது. சட்டத்திருச்சபையும் அன்புத் திருச்சபையும் ஒரேயொரு மெய்ப்பொருள். இதில் புறச்சட்டமானது அகவாழ்வின் வெளியடையாளமாகும்.

## சட்டத்தின் நோக்கம்

சட்டத்தை சட்டத்திற்காக கடைப்பிடிக்காமல் சட்டத்தின் நோக்கத்தை உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். சட்டம் மனிதருக்காக இருக்கிறது, மனிதர் சட்டத்திற்காக இல்லை (மாற் (2:27). கிறிஸ்துவின் அன்புக்கட்டளை மற்ற எல்லாக் கட்டளைகளுக்கும் அடித்தளம். அனைத்திலும் உயர் நெறி அன்பு ஒன்றே (1 கொரி 12:31). அன்பே திருச்சட்டத்தின் நிறைவு (உரோ 13:10). திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் கூறியுள்ளதுபோல் "திருச்சபையின் வாழ்விலும் கிறிஸ்தவ விசுவாசிகளின் வாழ்விலும் உள்ள விசுவாசம் அருள் , அருங்கொடைகள் அன்பு ஆகியவற்றின் இடத்தைப்பிடிப்பது சட்டத்தின் நோக்கமன்று. மாறாக அன்பு, அருள் அருங்கொடைகளுக்கு முன்னுரிமை அளித்து திருச்சபை சமூகத்தில் ஒழுங்கை நிலைநாட்டுகின்றது சட்டம். மேலும் திருச்சபையின் சமூக வாழ்விலும் தனிநபர் வாழ்விலும் முறையான வளர்ச்சியை சட்டம் எளிதாக்குகின்றது."

சட்டம் தேவை. ஆனால் அது ஒரு கருவியே அன்றி இலட்சியம் அன்று. நமது இலட்சியம் : உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்வராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள் (மத் 5:48). இந்த இலட்சியத்தை அடைய ஒரு கருவியாக இருப்பதுதான் திருச்சட்டம்.

எனவே இத்தகைய திறந்த மனநிலையுடன் சட்டமே எல்லாம் என்பது பரிசேயத்தனம், சட்டமே வேண்டாம் என்பது காட்டுமிராண்டித்தனம்.

## இறைமக்கள் என்னும் பரம்

திருச்சபைச்சட்டம் திருச்சபையில் பிரதிபலிக்க வேண்டும். சங்கம் நலமான முழுமையான திருச்சபை இயலை உருவாக்கியுள்ளது. திருச்சபை எனும் மறைபொருளை "இறைமக்கள்" எனசங்கம் வர்ணித்துள்ளது. இச்சொல்லை பலர் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். அதனால் பல குழப்பங்கள் விளைந்துள்ளன. அவை அகற்றப்பட வேண்டும்.

முதலாவது திருச்சபை என்பது இறைமக்களா? அல்லது கிறிஸ்துவின் மறையுடலா? என்ற கேள்வி எழுகின்றது. இறைமக்கள் என்ற சொல் விவிலிய செறிவு மிக்க சொல் என்றாலும் இது மட்டும் திருச்சபை எனும் மறைபொருளை முழுமையாக உணர்த்த முடியாது. இறைமக்கள் என்ற கருத்துடன் கிறிஸ்துவின் மறையுடல் என்ற கருத்தும் இணைக்கப்படவேண்டும். சங்கமும் திருச்சபையை கிறிஸ்துவின் மறையுடல் என்று அழைக்கிறது (திருச்சபை எண் 7). எனவே திருச்சபையின் முழுமையான இலக்கணம் கிறிஸ்துவின் மறையுடலாகத் திகழும் இறைமக்கள். இரண்டாவது இறைமக்கள் என்ற சொல் பொதுநிலையினரை மட்டும் குறிப்பிட்டு திரு ஆட்சியாளர்களை விலக்கி வைப்பதுபோல் ஒரு சிலர் தவறாக நினைக்கின்றனர். பொதுநிலையினர் ஒருவர் என்னிடம் நாங்கள் தான் இறைமக்கள், திருச்சபையில் நீங்கள் யார்? என்று கேட்டார். திருப்பணியாளர்கள் இறைமக்கள் கூட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டாலும் அவர்களும் இறைமக்களே. இறைவனுடைய ஏற்பாட்டின்படி திருச்சபையில் இரண்டு நிலையினர் உள்ளனர். அவர்கள் முறையே திருப்பட்டங்கள் பெற்ற திருப்பணியாளர்கள் அல்லது குருகுலத்தினர். திருப்பட்டங்கள் பெறாத பொது நிலையினர். அப்படியானால் துறவறத்தார் யார்? நற்செய்தி அறிவுரைகளான கற்பு ஏழ்மை கீழ்ப்படிதலைக் கடைப்பிடிக்க பகிரங்க வார்த்தைப்பாடுகள் எடுப்பவர்கள்தான் துறவறத்தார். இவர்கள் குருகுலத்தினராகவோ இருக்கலாம் முன்னயவர்கள் குருகுலத்துறவிகள் என்றும் பின்னயவர்கள் பொதுநிலைத்துறவிகள் என்றும் அழைக்கப்படுவர். துறவற நிலை என்பது குருகுல நிலைக்கும் பொதுநிலைக்கும பொதுவானது. துறவறத்தார் திரு ஆட்சி அமைப்பை சார்ந்தவர்கள் அல்லர் (திருச்சபை எண் 4,3) இவ்வுண்மை புரியாததால் பல குழப்பங்கள் எழுகின்றன.

எனவே இறைமக்கள் என்ற சொல் திருப்பட்டங்கள் பெற்றுள்ள திருப்பணியாளர்களான குருகுலத்தாரையும் திருப்பட்டங்கள் பெறாத பொது நிலையினரையும் பகிரங்க வார்த்தைப்பாடுகள் எடுத்துள்ள துறவறத்தாரையும் உள்ளடக்கும். இவ்வுண்மையை சட்டம் பின்வருமாறு கூறுகின்றது. இறை ஏற்பாட்டின்படி கிறிஸ்தவ விசுவாசிகளிடையே திருப்பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் சட்டத்தினால் திருப்பட்டத்தினர் என்றும் அழைக்கப்படுகின்றனர். மற்ற கிறிஸ்தவ விசுவாசிகள் பொது நிலையினர் என்றும் அழைக்கப்படுகின்றனர். (தி.ச 207 பிரிவு 1 ) இவ்விரு தரப்பினரிடமிருந்து வார்த்தைப்பாடுகள் வழியாக இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவ விசுவாசிகள் உள்ளனர் (தி.ச 207 பிரிவு 2). சங்கத்திற்கு முன் விசுவாசிகள் என்ற சொல் பொதுநிலையினரை மட்டும் குறித்தது. ஆனால் சங்கத்திற்குப் பின் இச்சொல் குருகுலத்தார் துறவறத்தார் மற்றும் பொது நிலையினர் ஆகிய மூவரையும் குறிக்கும். அப்படியானால் இம்மூவரையும் எவ்வாறு வேறுபடுத்திக் காட்டுவது என்ற கேள்வி எழுகின்றது. திருப்பணியாளர்களான கிறிஸ்துவின் விசுவாசிகள் என்னும் இம்மூவகையினரையுமே வேறுபடுத்திக்காட்ட வேண்டும். சங்கமும் சட்டமும் இறைமக்கள் என்ற சொல்லையும் கிறிஸ்துவின் விசுவாசிகள் என்ற சொல்லையும் இணைத்தே பயன்படுத்தி உள்ளன. திருச்சட்டத்தின் இரண்டாம் புத்தகம் இறைமக்கள் என்ற தலைப்பையும் அப்புத்தகத்தின் முதல் பகுதி கிறிஸ்தவ விசுவாசிகள் என்ற தலைப்பையும் தாங்கியுள்ளது.

எனவே நாம் பெறவேண்டிய நலமான பார்வை திருச்சபை என்பது கிறிஸ்துவின் மறையுடலான இறைமக்கள் திருக்கூட்டம். இத்திருக்கூட்டம் கிறிஸ்தவ விசுவாசிகள் என்று அழைக்கப்படுகிறது. இதில் குருகுலத்தார் துறவறத்தார் மற்றும் பொது நிலையினர் ஆகிய மூவகையினரும் அடங்குவர். □

# பங்குச்செய்திகள்

## கோமரசன் குளத்தில் அன்பிய வாரம்

கோமரசன்குளம் பங்கிலே அன்பிய வாரம் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்பிய வாரத்தின் முதல் நாளாகிய 19.5.2002 அன்று அருட்பணி. அருள்நாதன் அடிகளாரால் அன்பியக் கொடியேற்றப்பட்டு திருப்பலி ஆரம்பமானது. திருப்பலியின் ஆரம்பத்தில் வேதாகமம் பவனியாக கொண்டுவரப்பட்டு ஊக்குவிப்பாளர் ஒருவரால் அரியணை ஏற்றப்பட்டு அன்பிய வாரம் ஆரம்பமானது.

அன்பிய வாரத்தின் இரண்டாம் நாளில் எட்டு அன்பியங்களும் இணைந்து ஆலய வளாகத்தில் சிரமதானப் பணியினை மேற்கொண்டனர்.

அத்தோடு அடுத்தடுத்த நாட்களில் அன்பியங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து நோயாளிகளை தரிசித்தல் இல்லங்களில் ஒன்று கூடி செபித்தல், விளையாட்டுகள், கலைநிகழ்வுகள் போன்றனவும் நடத்தப்பட்டன. அத்தோடு அன்பியம் சம்மந்தமான படக்காட்சியும் திருவிழிப்பும் நடைபெற்றன.

இறுதியாக 26.05.2002 சிறப்புத் திருப்பலி அருட்தந்தை அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டு அன்பிய வாரம் நிறைவு செய்யப்பட்டது. எமது பங்கிலே உயிரற்ற நிலையிலிருந்த அன்பியங்கள் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கு இவ்வன்பிய வாரம் பெரிதும் உறுதுணையாக இருந்ததென்றால் அது மிகையாகாது.

அருட்சகோதரி. ஜயறின் டொறத்தி
(அன்பின் சகோதரி)

# திருக்குடும்ப சபை தியானயோக சகோதரிகள்

தொடர் கட்டுரை 2

## இன்று உலகில் இவர்கள் பிரசன்னம்:

இன்று உலகில் இவர்களின் இல்லங்கள் நான்கு உண்டு. நான்கு இல்லங்களும் இணைந்த நிர்வாக அமைப்பு திருக்குடும்ப சபையின் VICARIATE என்று பெயர் பெறும். இந்த இல்லங்கள் தனிப்பட்ட ஒரு மாகாணத்திற்கு சேர்ந்ததல்ல. அவை முழு சபைக்கும் பொதுவானது. இவை தனிப்பட்ட நாட்டிற்கோ, கலாச்சாரத்திற்கோ சொந்தமானவையல்ல. சாதி, கலாச்சார பேதமின்றி இவர்கள் ஒன்றிணைந்து, குடும்ப உணர்வுடன் வாழ்கின்றனர். இவர்கள் தலைவி பிரான்ஸ் நாட்டு ஏகாந்த இல்லத்தில் இருந்து இவர்களை வழிநடத்தி இவர்களுக்குப் பொறுப்பாக உள்ளார். இனி ஒவ்வொரு இல்லத்தையும், அவற்றின் பணியையும் குறிப்பாக பார்ப்போம்.

## பிரான்ஸ்: ஏகாந்த இல்லம் (la soliude martillac)

இவ்வில்லம் போர்டோ நகரில் மார்த்தியாக் என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது. இதுதான் சபையின் பிறப்பிடமும், காட்சித்தியான சபை முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இடமும் ஆகும். இங்கு பிரான்ஸ், ஸ்பானியா, போலந்து, அயர்லாந்து, லெசொத்தோ, ஆபிரிக்கா, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சகோதரிகள் குழுவாக வாழ்ந்து தலத் திருச்சபைக்கு சிறந்த பணியாற்றுகிறார்கள். இவர்கள் இல்லம் இவர்களோடு செபத்தில் இணைய விரும்புவோருக்கும், நற்கருணை நாதரை ஆராதிக்க வருவோருக்கும், இன்னும் இறை அனுபவத்தை அமைதியில் பெற விரும்புவோருக்கும் திறந்து இருக்கின்றது. இவ்விடம் எமது திருக்குடும்ப சபையின் யாத்திரைத் தலமாகவும், பொது உருவாக்கத்துக்குரிய இல்லமாகவும் யாவரையும் கவர்ந்தீர்க்கும் மையமாகவும் இருக்கின்றது.

## ஸ்பானியா: ஏகாந்த இல்லம்: OTEIZA

காட்சித்தியான வாழ்வுக்கு உதவக்கூடிய முறையில் சில ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட இல்லம் இது. தொடக்கத்தில் மூன்று குழுக்களாக வாழ்ந்த ஸ்பானிய சகோதரிகள் தற்போது இவ்வில்லத்தில் ஒரே குழுவாக இணைந்து தங்கள் செப வாழ்வினாலும், மற்றவர்களை தம் வழிபாடு, செபங்களில் பங்கு கொள்ள வரவேற்பதாலும்' தலத்திருச்சபைக்கு சிறந்த பணிபுரிகின்றனர். இவர்களை இவ்விடத்துக்கு முதன் முதலாக அழைத்தபோது ஆயர் கூறியது, "எங்கள் தலத்திருச்சபையில் ஒரு மலராக இருங்கள். விசுவாச வாழ்வு, செபம் தபம், பரிந்துரைக்கும்பணி எமக்கு அதிகம் தேவைப்படுகின்றது"

## ஆர்ஜென்ரீனா: ஏகாந்த இல்லம்: POSADAS

இவ்விடத்து ஆயரினதும், மக்களினதும் ஆவல், அழைப்பின்படி ஆறு சகோதரிகளைக் கொண்ட இவ்வில்லம் புதிதாக அமைக்கப்பட்டது. இதுவே அந்த நாட்டின் முதல் காட்சித்தியானக் குழு. இச்சகோதரிகள் வரவால் மகிழ்ந்த மக்கள் கூறியதாவது. "இறைவன் இவ்வில்லத்தின் மூலம் எமக்கு ஒரு பெரிய கொடை வழங்கியுள்ளார். இது எங்கள் செப இல்லம் இங்கு மக்களும், குருக்கள், வேறு சபையைச் சார்ந்த துறவிகளும் சென்று அமைதி, ஏகாந்த சூழலில் இறை அனுபவம் பெற்று மகிழ்கின்றனர்".

## சிறீலங்கா ஏகாந்த இல்லம் - நாகொட

தொடக்கத்தில் எமது நாட்டில் வடக்கில் ஒன்றும் தெற்கில் ஒன்றுமாக இரு காட்சித்தியான இல்லங்கள் இருந்தன. தற்போது இரு குழுக்களும் இணைந்து ஒரே இல்லத்தில் சபையின் அருங்கொடைக்கேற்ப சாதி, கலாச்சார, மொழி பேதமின்றி இறை குடும்ப உணர்வுடன் வாழ்கின்றனர். இவர்கள் எதிர்கொள்ளும் சவால் வன்செயல் கலாச்சாரம். இதன் மத்தியில் விசுவாசத்தை ஆழப்படுத்தி கருணை, மன்னிப்பு, மனித மாண்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டு தம் மறைந்த செப, தப வாழ்வால் எமது நாட்டிற்கும் திருச்சபைக்கும் பணிபுரிகின்றனர். சகல மக்களையும் ஒரு நாள் ஒரே குடும்பமாக்கும் இறைவனின் திட்டத்தை மனதில் கொண்டு, விசுவசித்து தங்கள் ஏகாந்த அமைதியில் கிறீஸ்துவில் இறைவனுடனும், அனைத்து மக்களுடனும் ஐக்கியமாக வாழ்வதன் மூலம் ஒற்றுமையின் அருட்சாதனமாக இவர்கள் பிரசன்னம் திகழ்கின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பொழிவு

## உண்மையான அன்பு

### சிந்தனைக் கதை



அது ஒரு அழகிய காடு. அந்த அடர்ந்த காட்டின் நடுவே ஒரு முட்புதர். அந்த முட்புதரின் நடுவில் ஒருசோடிக் குருவிகள் முட்டையிட்டு குஞ்சுகள் பொரித்து சந்தோஷமாய் வாழ்ந்து வந்தன. அவை தினமும் வேறிடங்களுக்குச் சென்று இரை தேடுவது வழக்கம். அதேபோன்று அன்றும் தம் குஞ்சுகளை கூட்டில் விட்டுவிட்டு அக்குருவிகள் இரைதேடச் சென்று விட்டன. அவ்வேளையில் வேட்டையாடுவதற்காக அங்கே வேடர்கள் வந்தார்கள். முயல் ஒன்று கண்ணில்படவே அதனை வேட்டையாட அவ்வேடர்கள் முனைந்தனர். ஆனால் முயல் அவர்களைக் கண்டு ஓடிவிட்டது. அது ஓடி அருகேயுள்ள முற்புதருக்குள் புகுந்தது. இதனைக் கண்ட வேடர்கள் முட்புதரை நோக்கிச் சுட்டனர். இதனால் முட்செடி தீப்பற்றிக் கொண்டது. அவ்வேளையில் இரைத்தேடச் சென்றிருந்த தாய்க் குருவி அங்கே வந்தது. தீயின் நடுவில் அவதியுறும் தன் குஞ்சுகளைக் கண்டு பெரும் கவலையுற்றது. குஞ்சுகளைக் காப்பாற்ற எண்ணி எரியும் நெருப்பின்மீது தன் சிறகுகளை விரித்து முட்செடியின் மீது அமர்ந்தது. அவ்வேளை பலத்த காற்றுடன் மழை பெய்தது. மழை ஓய்ந்ததும் வேடர்கள் முயலைத் தேட ஆரம்பித்தனர். முட்செடியை பார்த்தபோது தாய்க் குருவி ஒன்று தீயினால் கருகிப்போயிருப்பதைக் கண்டனர். ஆயினும் குஞ்சுகள் எந்த ஆபத்துமின்றி நலமுடன் இருப்பதை அவதானித்தனர். அதனைக் கண்ட வேடர்கள் தன்னுயிரை அழித்து தன் குஞ்சுகளைக் காப்பாற்றிய தாய்க்குருவியின் தியாகத்தை எண்ணி வியந்தனர்.

இதிலிருந்து உண்மையான அன்பு எப்படிப்பட்டது என உணர முடிகிறதல்லவா? உண்மையான அன்பு பிறருக்காக தன்னையே பலியாக அளிக்கக் கூடியது. கிறிஸ்துவும் நம்மேல் கொண்ட அன்பினால் நமக்காகத்தன் உயிரையே அர்ப்பணித்தார்.

செ. டெல்சியா,
நறுவிலிக்குளம், நானாட்டான்.

## அன்பு... அன்பு... அன்பு!



ஆதியிலே இறைவன் எல்லா உயிரினங்களையும் படைத்து அவற்றை நல்லதெனக் கண்டார். அதேபோல் உயிருள்ள மனிதர்களையும் இறைவன் படைத்து அவர்களின் இதயத் துடிப்புக்குள் அன்பு என்னும் உணர்ச்சியை உண்டாக்கி அதையும் நல்லதெனக் கண்டார். அவர் உண்டாக்கிய அன்புணர்விற்கு எல்லையே இல்லை. அது அலைகடலைவிடப் பரந்தது. இந்த அன்பின் மூலம்தான் இறைவன் எம் ஒவ்வொருவரையும் பாவத்தில் இருந்து மீட்டார். தம்மையே பலியாக்கி கல்வாரியில் அவர் அந்த அன்பை ததும்ப விட்டார். அவருடைய அன்பு எமக்காக மனுவுரு எடுத்த நல்லன்பு. எமக்காக தம்மையே உணவாக்கிய இரக்க அன்பு. எமக்காக பாடுகளை எல்லாம் ஏற்று இரத்தத்தை வெளியேற்றி எம்மை பாவத்தில் இருந்து மீட்ட பேரன்பு. எமக்காக தம்மையே அழித்த தேவ அன்பு. அவருடைய அன்பை மறப்பவர்களுக்கு மனிதப் பண்பே இல்லை.

இவற்றை எல்லாம் மறந்து அன்பு என்பதே தெரியாதவன் மனிதனே அல்லன். இறைவனின் அன்பை மறப்பவன் இறைவனையே மறந்து விடுகின்றான்.

எம். சுமித்திரா, தரம் -11 வட்டாரம் - 8, பேசாலை,

## பெற்றோரே கொஞ்சம் கவனியுங்க..!



தாயின் கருவிலே உன்னை நான் தெரிந்தெடுத்தேன் என்று இறைவன் கூறியிருக்கின்றார். தாய்ப்பாலையும் ஞானப்பாலையும் ஊட்டி வளர்க்க வேண்டியவள் தாய். தாயின் அன்பும் தந்தையின் அன்பும்தான் நிறைவானது. வேலியே பயிரை மேய்வதுபோல் இன்றைய பெற்றோரே பிள்ளைகளுக்கு இடையூறாக மாறிவருவதை நாம் காண்கின்றோம். சில பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே பாராபட்சம் காட்டுகின்றனர். சில பெற்றோர் - குடிவெறியில் பிள்ளைகளை மிருகங்களைத் தண்டிப்பதுபோல் தண்டித்து வளர்க்கின்றனர். சிலர் ஊரறிய துர்நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். இத்தகைய பெற்றோரின் குழந்தைகள் இறுதியில் மன வெறுப்பு அடைந்து வாழ்வையே வெறுக்கின்றனர். இதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அன்பையும் பாசத்தையும் நிம்மதியையும் வழிகாட்டுதலையும் எதிர்பார்த்து இருக்கும் குழந்தைகள் பெற்றோர்களின் தீய வழிகாட்டுதலால் வெறுப்படைந்து சமூகத்தில் தீயவர்களாக மாறி விடுகின்றார்கள்.

*"பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். அப்படிச் செய்தால் அவர்கள் மனம் தளர்ந்து போவார்கள்." (கொலோ. 3 :21)*

சந்தியோகு சவிரியம்மா, கொவ்வங்குளம், நானாட்டான்

## இயேசு ஒப்பற்றவர்

இயேசுதான் இனி புதிய பலிப்பீடம். அதில் அவர்தான் பெரிய குரு. அவர்தான் பலிப்பொருள். அந்தப் புதிய பலிப்பீடத்தைவிடச் சிறந்த பலிப்பீடம் இனி எங்கும் இருக்காது. இந்த இயேசு என்ற பெரிய குருவைவிட தூய்மையான, புனிதமான குரு வேறு எவரும் கிடையாது. இந்தப் பலிப்பொருளான இயேசுவைவிட இறைவனுக்கு உகந்த, ஏற்ற, பலி - உலகிற்கு வாழ்வு தரும் பலி வேறு ஒன்றும் இருக்க முடியாது. பழைய ஆரோன் குருத்துவப் பரம்பரை இயேசுவின் குருத்துவத்திற்கு முன் அடங்கி, ஒடுங்கிப்போக வேண்டியிருந்தது. பழைய பலிப்பொருள், கல்வாரிப் பலிப்பொருள் முன்னே மறைந்துவிடவேண்டி இருந்தது எனவே இயேசுவே ஒப்பற்றவர்.

செல்வி. கி. கிறிஸ்மேரி றெவல், 7ம் வட்டாரம், பேசாலை

# கவிதைக் களம்

### பாடுவோம் உம் புகழ் நாளுமே

காலைப் பொழுது - உந்தன்
புகழ் பாடுதே!
மாலை வெயில் - உந்தன்
அருள் பொழியுதே!
பூக்கள் உமக்கு மாலைகள்
பூத்துக் குலுங்கி ஆடுதே!
பறவைகள் உந்தன் புகழினைப்
பாடி ஆடி மகிழுதே!
அருவிகள் பாய்ந்து ஓடுதே
ஆண்டவன் உன்புகழ் பாடுதே!
வண்ணத்துப் பூச்சிகள் வடிவிலே
வானவன் உன் எழில் தெரியுதே!
மழைத் துளிகள் தெறிக்குதே
மன்னவன் உன் அருள் வழியுதே!
குயில் கூட்டங்கள் கூவுதே
கவிதைச்சரங்கள் பாடுதே!
பாடுவோம் உம் புகழ் நாளுமே
பாமாலை சூட்டியே போற்றுவோம்!

சுபாசினி,
125. சின்னப் பன்டிவிரிச்சான், மடு.



### விமலனே வருக!

யுத்த மண்ணில்
ரத்தக் கறைபோக்கி
நித்தம் மகிழும்
புத்தம் புதுயுகம்
படைக்கப் பூத்த
பரமனே வருக!

வறுமைக் கரங்களால்
வெறுமை விலங்கிட
ஏழை இதயங்கள்
ஏங்கிக் கிடக்கும்
நிலையது அகற்ற
நிமலனே வருக!

வேதனைகள் சோதனைகள்
வதைபடும் உள்ளங்கள்
வெந்துருகிப் போகாமல்
வெற்றியின் பாதையில்
வீரமுடன் செல்ல
விமலனே வருக!

S.செல்வராணி கூஞ்ஞ
தரம் - 12 கலை, அரிப்புத்துறை.



### ஆறுதல் ஆவீரே

மானிட வர்க்கத்தின்
மாண்புயர் யேசுவே!
எம்மை மீட்க
அனுப்பப் பட்டவரே!
தேனிலும் இனிய
வார்த்தைகள் சொன்னவரே!
ஒளியாக இருந்தெம்மை
மிளிரச் செய்பவரே!
கருணைக் கடலின்
கரைகாணா ஊற்றே!
உறவாய் இருந்தெம்மை
ஊக்குவித் திடுவீரே!
அடைக்கலம் தந்தெமக்கு
ஆறுதல் ஆவீரே!

ச. மெறின் டயானா
ஒன்றிய இல்லம், கள்ளியடி.


### உன் வாழ்வை அர்ப்பணி

வட்டமிட்ட வரம்பிற்குள்
வாடியிருந்த மலர்களே
நாம் சுற்றிவந்த தென்றல் எம்மை
சாய்க்குதையா கற்றிடுவோம்
கற்றிடுவோம் எம்மையே - நாம்
கற்றிடுவோம் எம்மையே

விழித்தெழு மனிதனே விழித்தெழு
ஒழித்திடு சோம்பலை ஒழித்திடு
எங்கே நிற்கிறாய் நீ திருச்சபையில்?
விழிம்பிலா இன்னமும் நிற்கிறாய்?
விழிம்பினை விட்டிறங்கு
மையத்திற்கு வந்திடு
மையத்திலே நின்றுகொண்டு
மாண்பு பல செய்திடு!

பணிதனை நீ மறந்து
பயணமாய் சென்றுவிட்டாய்
பாரினில் உன் வாழ்வை
பரிதவிக்க விட்டு விட்டாய்.
உன்னையே நீ உடைத்து
பிறருக்கு உதவிடு
இறை அன்பில் வாழ்ந்திட
உன் வாழ்வை அர்ப்பணி!

சு. மதன் சில்வா
தரம் 11, கற்கிடந்த குளம்



### இதயம் திறக்க வேண்டும்

துன்பம் துடைத்திட மண்ணில் பிறந்தாய்
துயர் தரும் மரத்தைச் சுமந்திட வந்தாய்
மர்மக் கள்வரின் மத்தியிலே
மரத்தில் தொங்கி நின்றாய் - கழு
மரத்தில் தொங்கி நின்றாய்

பாதக யூதரின் பாவம் போக்கி
ஈட்டியால் குத்தியவர் கண்திறந்தாய்
அறியாது செய்யும் பிழையை பொறுமென்று
அன்பினால் பகைமை வென்றாய் - நீ
அன்பினால் பகைமை வென்றாய்

மரத்தையொத்த குணத்தைக் கொண்டவர்
மண்ணில் உன்னைப் புதைத்தபோது
மகிமையின் சாட்சியாய்
மரணத்தை விட்டெழுந்தாய் - நீ
மரணத்தை விட்டெழுந்தாய்.

இரட்சகரே இயேசுவே என்தேவனே
இரட்டை வாழ்வினால் சோர்ந்துபோகும்
இரக்கமே இல்லாத எனக்காக
இதயம் திறக்க வேண்டும் - உன்
இதயம் திறக்க வேண்டும்

யே. றொன்சி டயஸ்
முள்ளிக்குளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பா பதில்கள்

ஒவ்வொரு மன்னாவிலும் பிரசுரிக்கப்படும் கேள்விகளில் அறிவு சார்ந்த ஆக்கபூர்வமான பயனுள்ள கேள்வி ஒன்று பாராட்டுக்குரிய கேள்வியாகத் தெரிவுசெய்யப்படும். எங்கே உங்கள் கேள்விக் கணைகளை அனுப்புங்கள்! (பதிப்பாசிரியர்)

கே: சந்திரிக்காவும் பிரபாகரனும் எப்போது கை குலுக்குவார்கள்?

*ய.டொறின் பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.*

ப: காரியங்கள் சரியான பாதையில் முன்னேறிச் செல்லும் போது கைகுலுக்குவதொன்றும் கடினமான காரியமல்ல. நாம் எதிர்பார்க்காதவர்களுடனெல்லாம் கைகுலுக்கிய பிரபாகரன் சந்திரிக்காவுடன் கைகுலுக்கும் காலம் தூரத்தில் இல்லை.

▣ கே: கிறிஸ்துவின் 2ம் வருகையின்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களே முதலில் உயிர்த்தெழுவர் என வேதம் சொல்கிறது. அப்படியானால் கத்தோலிக்கருக்கும் பிரிந்த சபையினருக்கும் இடையே பல்வேறு காலங்களில் ஏற்பட்ட மோதலில் பலர் இறந்துள்ளனர். இவர்களில் யார் வேதசாட்சிகள்?

*பா. றேஜிஸ் , சூரிய கட்டைக்காடு, நானாட்டான்*

ப: உள்ளங்களை ஊடுருவிப்பார்க்கும் கடவுளே யார் வேதசாட்சிகள் என்பதை தீர்மானிக்க முடியும்.

கே: திருப்பலியில் சென்று வாருங்கள் பூசை முடிந்தது என்று கூறிவிட்டு பின்பு நற்கருணை ஆசீர்வாதம் வைப்பது சரியா?

*ய. யஸ்ரின், கண்டி.*

ப: "முதல் பந்தி முடிந்து விட்டது. இப்போது பாயாசம் பரிமாறப்படுகிறது" என்று மைக்கில் அறிவிப்பு செய்கிறார்கள் என வைத்துக்கொள்வோம். முதல் பந்தி முடிந்துவிட்டது என்று எழுந்து வீராவேசமாக போய்விடுவீர்கள் நீங்கள். ஆனால் நான் போக மாட்டேன். இருந்து பாயாசத்தை ஒரு கைபார்த்துவிட்டுத்தான் போவேன்.

கே: வாழ்க்கை என்பது என்ன?

*எஸ். வாணன், முதலியார் குளம், செட்டிகுளம்*

ப: வாழ்க்கை என்பது கரையில்லாத காட்டாறு. கரை கட்டிக்கொள்ளுகிறவர்கள் வாழ்க்கையை வாழ்கிறார்கள். மற்றவர்கள் வாழ்க்கையை அழிக்கிறார்கள்.

கே: முன்வைத்த காலைப் பின் வைக்கலாமா?

*வளர்மதி, வனியா*

ப: நீங்கள் கால் வைக்கும் இடத்தைப் பொறுத்தது அது.



கே: திருமணம் என்பது சொர்க்கமா? நரகமா?

*சின்னராசா, சிலாவத்துறை*

ப: திருமணம் என்பது ஒரு மாம்பழம். சாப்பிட்டால்தான் தெரியும் இனிப்பா? புளிப்பா? என்று.

கே: விதவை என்பது பெண்பால். அதற்கு ஆண்பால் என்ன?

*கயல் விழி, கன்னாட்டி. அடம்பன்*

பதில்: தபுதாரன்.

கே: படிப்பு, படிப்பு என்று பெருமை கொள்ளும் பெண்களைப் பற்றி?

*மாலதி, மாவிலங்கேணி, முருங்கன்*

ப: ஆண் படித்தால் அது அவனை மட்டும் காப்பாற்றும். ஒரு பெண் படித்தால் அது குடும்பத்தையே காப்பாற்றும்.

கே: இந்தக் காலத்து யுவதிகளை நம்பவே முடியவில்லையே?

*வளவன். வங்காலை.*

ப: உண்மைதான் வளவன்! "பியூட்டி பார்லரிலிருந்து வந்த யுவதியைப் பார்த்துக் கண்ணடித்தேன். பிறகுதான் தெரிந்தது அவள் எனது பாட்டி என்று..." இப்படிக் குமுறியது ஒரு இளசு!

கே: பெரியப்பா, காதலித்தால் கவிதை வரும் என்கிறார்கள் எனக்குக் கண்ணீர்தான் வருகிறதே?

*கனகன், காத்தான் குளம்.*

ப: சாகாவரம் பெற்ற கண்ணீர்க் கவிதைகளும் சரித்திரத்தில் இடம்பிடித்துள்ளதே!

கே: நீங்கள் எதிர்பார்த்த இலட்சியங்கள் ஏதாவது நடைபெறாமல் போனதுண்டா?

ப: நடைபெறாமல் இருக்கும் வரைதானே அவை இலட்சியங்களாகவும் இருக்க முடியும்!

▣ இந்த அடையாளமிடப்பட்ட கேள்வி பாராட்டுக்குரியதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

# நீத்தார் நினைவுகள்

15ஆம் ஆண்டு நினைவு



ம. சிறில் யோசப் பெரேரா
பள்ளிமுனை.

மண்ணில் 07. 07. 1948 விண்ணில் 09. 07. 1987

பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்
வாழ்க்கையில் எங்களுக்கு
கலங்கரை விளக்காய்
வழிகாட்டிய எங்கள்
அன்புத் தந்தையே!
காலங்கள் பல
உருண்டோடினாலும்
உங்கள் நினைவு
மாறாதப்பா!
நீங்கள் இம்மண்ணைவிட்டு
விண்ணகம் சென்றாலும்
எங்கள் நெஞ்சங்களில்
என்றும் நீங்கள் வாழ்ந்து
கொண்டு
இருக்கின்றீர்களப்பா!.

என் அன்பான தந்தையின் ஆன்ம சாந்திக்காக 09. 07. 2002 பள்ளிமுனை புனித லூசியா தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, அன்பு
பிள்ளைகள், அன்பு
சகோதரி.

1ம் ஆண்டு நினைவு



திருமதி யூலியானம்மா
யூஜின்வாஸ்- வங்காலை

மண்ணில் 20. 06. 1960 விண்ணில் 27. 06. 2001

குடும்பத்தின் முதற்கனியார்
குலவலயத்தில் நீ பிறந்தாய்
குற்றமேதும் கண்டறியா
கன்னியென நீ திகழ்ந்தாய்!
குடும்பநலம் பார்ப்பாரென்று
யூஜினை நீ கொண்டாய்
குணாளன் எனஅவர் சென்ற
இடமெல்லாம் நீ சென்றாய்
குறைவான வயதினிலே
உலக வாழ்வை நீ
முடித்தாய்!
குவலயம் குறைகூற
நீ ஏன் இக்கதியானாய்
குறை நீக்கி இறைவன்
உனை மோட்ச இராணியாய்
ஏற்பாரம்மா.
தம்பி தங்கையரை தவிக்க
விட்டா நீ சென்றாயம்மா
தங்களைக்காணா
தம்பி தங்கையர் பதைத்து
துடித்தனரம்மா.
தயவுடன் நீ அவர்களுக்கு
ஆசீர் அளிப்பாயம்மா.
தஞ்சமென தரணியில்
வாழ்த்திட்ட அக்காவே
தப்பாது எம்மவர்
வேண்டுதல்கள்
உமக்களிப்போம் தரணியில்
உன் அன்பர் நண்பர்
எத்தனை எத்தனை தவறாது
உமது சேமம் விசாரிப்போர்
எத்தனை எத்தனை.

அன்பு கணவன், பெற்றோர்
சகோதரர்,சகோதரிகள்
உற்றார் உறவினர்கள்,
நண்பர்கள்.

1ம் ஆண்டு நினைவு



அ. ஜோண்சன் (கங்கை
அமரன்) ப.க.கொ.மன்னார்

மண்ணில் 02. 02. 1965 விண்ணில் 29. 06. 2001

பள்ளிப் பருவத்தில் எம்மை
பிரிந்தவனே
இளம் வயதினிலே எம்மை
விட்டு உயிர் துறந்தவனே
எம் கண்கள் உன்னைப்
பார்க்கும் முன்னே
பாதிவழியில் காலம் உன்
உயிர்மேல் ஆசைவைத்து
விட்டான் துடிக்கின்றோம்!
உன் ஆசை முகம்
கானாமல் துடிக்கின்றோம்
உன்நினைவால் உன்
ஆன்ம சாந்திக்காக
தினமும் ஒரே குடும்பமாக
இறைவனை வேண்டி
நிற்க்கின்றோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 29.06.02 அன்று மன்னார் புனித மரியன்னை ஆலயத்தில் திருப்பலி நடைபெறும்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர் சகோதரர்,உற்றார்
உறவினர்கள்.

## உங்களது மிகச் சிறந்த அன்பளிப்பு மன்னா!

யாம் பெற்ற இன்னபம் பெறுக இவ்வையகம்!

**உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவைஅறிமுகம் செய்யுங்கள்!**

உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ உள்ள உங்கள் உறவினர் நண்பர்களுக்கு நீங்கள் வழங்கக் கூடிய சிறந்த ஞாபகப்பரிசு

**மன்னா**

நீங்கள் ஆவலோடு படித்து சுவைக்கும் மன்னாவை தூர இடத்தில் இருக்கும் உங்கள் உறவினர் நண்பர்களும் படித்து சுவைக்கும்படி செய்யலாமே! அப்படியாயின் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப்பணத்தையும் எமக்கு அனுப்பி வைக்கவும். உங்கள் உறவினர் நண்பரின் வீடு தேடி மன்னா பறந்து செல்லும். உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக ரூபா 200யும் வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக ரூபா 750யும் அனுப்பவும். சந்தாப்பணத்தை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக் கட்டளை மூலமாகவோ அனுப்பலாம்.

## நீத்தார் நினைவுகள் பற்றிய அறிவித்தல்

நீத்தார் நினைவுகள் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளும் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களா? அப்படியானால் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். எந்த மாதத்தில் இந்நினைவுகள் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முன்னைய மாதத்தில எமக்கு கிடைக்கக்கூடியவாறு நினைவுக் குறிப்பு,( அதாவது இறந்தவரின் முழுப்பெயர், இடம், பிறந்த திகதி ஆண்டு மாதம், இறந்த திகதி ஆண்டு மாதம், அஞ்சலிக் கவிதை அல்லது வசனம்) புகைப்படப் பிரதி என்பவற்றுடன் கட்டணமாக ரூபா 500 ஆகியவற்றை அனுப்பி வையுங்கள். தகவல் தருபவரின் பெயர் முகவரியையும் முடிந்தால் தொலைபேசி எண்ணையும் குறிப்பிடவும். திருமறைப்பணி நிலையத்தில் பணி புரியும் அருட்சகோதரி லோறன்சியா அவர்களிடம் அலுவலக நேரத்தில் நேரடியாகவும் கையளிக்கலாம். தகவல் தருபவரின் பெயர் முகவரிக்கு புகைப்படப் பிரதிகளை திருப்பி அனுப்பி வைப்போம்.

பதிப்பாசிரியர்.

## 25ஆவது திருமண வாழ்த்து

(03. 06. 2002)

அ. ஜேம்ஸ் ஜெறாட் ஜேசுதாசன்
ஜே. பிரான்சிஸ் அம்மா (றோஸ்மலர்)



பார் போற்றும் வாழ்க்கையிலே
ஆண்டுகள் 25ஐக் கடந்து இன்று
பேர் சொல்லும் பிள்ளைகளை ஈன்றெடுத்த
பெற்றோரே எங்கள் பேரன்புக்குரியோரே!

கருணையோடு எம்மை வழிநடத்தி
கல்வியினைத் தந்த நற் தெய்வங்களே!
ஊரெல்லாம் உம்மை வாழ்த்திடவே
உவகை எம் நெஞ்சில் பொங்கிடவே

காலம் கடந்து சென்றாலும் - உம்
அன்புப் பணிக்குத் தடையுண்டோ?
பாலம் இட்டுத் தடுத்தாலும் - உம்
பாசத்திற்கு ஏதும் குறையுண்டோ?

இருவர் வாழ்வும் இமயம் போல்
எழுந்து நின்று ஒளி வீச
பிள்ளைகள் நாமும் வாழ்த்துகின்றோம்!
ஆண்டுகள் நூறு புதுமை பெற்று விளங்கிடவே!.

வாழ்த்துவோர்கள்: பிள்ளைகளாகிய ஜே. அன்ரனி தேவதாஸ், ஜே.மேரி றோசலின், ஜே.அன்ரனி நிமல்தாஸ், ஜே.அன்ரனி றூபதாஸ், ஜே.மேரி இமாக்குலின், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதிப்பித்துக்கொள்ளுங்கள்.

மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா
உள்நாடு இலங்கை ரூபா 200
வெளிநாடு இலங்கை ரூபா 750 (10 யூரோ)



## தொடர்புகளுக்கு

| அலுவலக முகவரி | வதிவிட முகவரி |
|---|---|
| பதிப்பாசிரியர், மன்னா திருமறைப்பணி நிலையம், செபஸ்ரியார் வீதி மன்னார். | பதிப்பாசிரியர் மன்னா பங்குப்பணிமனை, புனித லோறன்சியார் ஆலயம், தலைமன்னார். |
| OFF. ADDRESS | RES. ADDRESS |
| The Editor, MANNA Pastoral Centre, St. Sebestian's Street Mannar, Sri Lanka. | The Editor MANNA Parish House St. Lawrence Church Talaimannar, Sri Lanka. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அரங்கம்

## தமிழ் மக்கள் இனியும் ஏமாற்றப்படக் கூடாது!

இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் வரலாறு என்பது சிங்களப் பேரினவாதிகளினால் ஏமாற்றப்பட்டு வந்த ஒரு துரதிஸ்ர வரலாறாகவே உள்ளது.

"போர் என்றால் போர். சமாதானம் என்றால் சமாதானம்" என்ற கோசத்துடன் ஜே.ஆர்.ஜயவர்தன தமிழ் மக்கள் மீது தனது சர்வ அதிகாரத்தைப் பிரயோகித்தார். உதட்டளவில் சமாதானத்ததை உச்சரித்த அவரால் போரில் வெற்றிபெற முடியவில்லை. சிங்களம் மட்டும் என்ற சட்டத்துடன் அரியணை ஏறிய எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கையினால் அன்றைய ஒரு சில தமிழர்கள் மட்டும் அரச பதவிகளைத் துறந்தனர். ஏனைய தமிழ் மக்கள் சிங்களம் படித்து சித்தி பெற்று ராஜ மரியாதையுடன் பதவி வகித்தார்கள்.

சிங்களம் மட்டும் சட்டத்தால் நாடு பிரிவுபடும் என்றுணர்ந்து தனிநாடு கோரிய சுந்தரலிங்கம் அரசியல் கடலில் மூழ்கடிக்கப்பட்டார். சிங்கள மக்களுடன் இணைந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முயற்சித்த சேர். பொன். அருணாசலம், சேர்.பொன். ராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்களுக்கு நேர்ந்த கதியை மறந்த தமிழ்த் தலைவர்கள் தொடர்ந்தும் சிங்கள இனத் தலைவர்களில் நம்பிக்கை வைத்தனர்.

ஜே.ஆரின் பாசறையில் வளர்ந்த பிரேமதாசா இந்திய அமைதி காக்கும் படையை இலங்கையிலிருந்து வெளியேற்றும்வரை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உறவு வைத்தார். இந்திய அமைதிப் படையின் வெளியேற்றமும், ரோகன விஜயவீர போன்ற ஜே. வி. பித் தலைவர்கள் கொல்லப்பட்டதும் சிங்கள மக்கள் மத்தியில் பிரேமதாஸாவுக்கு செல்வாக்கை ஏற்படுத்தியது. தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சகவாசம் வைத்துக் கொண்டு புலிகளுக்கு எதிரான தமிழ்க் குழுக்களுக்கு ஆதரவு வழங்கியதால் பிரேமதாஸாவினால் நீண்ட காலம் அரசியல் நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. பிரேமதாஸாவின் மறைவுக்குப்பின் ஜனாதிபதியான டி. பி. விஜயதுங்க மரம், செடி, கொடி, பற்றிப் பேசி தமிழ் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்தார். சிங்கள மக்களின் விருப்பத்துக்கு மாறாக ஜனாதிபதி பதவியை அலங்கரித்தபின் பதவி விலகினார்.

யுத்தத்தால் நொந்துபோன மக்களுக்கு ஆறுதல் தரும் செய்தியுடன் சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க ஜனாதிபதியானார். 17 வருட கால ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் அல்லல்பட்ட மக்கள் மிகப் பெரும் பலத்துடன் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை ஆட்சிபீடமேற்றினர். எல்லாம் நல்லபடியாய் நடக்கும் என எண்ணியிருந்த மக்கள், நம்பக் கூடிய வகையிலேயே ஆரம்ப கால நடவடிக்கைகள் இருந்தன. யுத்தம் என்ற பேச்சே இல்லை. சமாதானம் என்றால் சமாதானம் தான் என்ற தொனி மேலோங்கியது. சமாதானத்துக்காக ஏங்கிய மக்கள் மீது படிப்படியாக யுத்தம் திணிக்கப்பட்டது. அழிவுகளும், இடம் பெயர்வுகளும் மக்களை வதைத்தது. பொருளாதாரத் தடை, வடக்கு கிழக்கு மக்களை இந்த நாட்டிலிருந்து பிரித்தது. இராணுவ வெற்றியைக் குறியாக வைத்து யாழ்ப்பாணம், அரசாங்கப் படையினரால் கைப்பற்றப்பட்டது. குடாநாடு இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியானது. மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளானார்கள். முல்லைத்தீவு, பூநகரி, ஆனையிறவு இராணுவ முகாம்கள் புலிகளின் தாக்குதலினால் நிர் மூலமாகின. இவற்றின் உயிரிழப்பையும், ஆயுத இழப்பையும் ஈடு செய்ய முடியாது அரசாங்கம் திண்டாடியது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஜனாதிபதியின் அதிகாரங்களுக்குச் சவால் விடும் வகையில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. சமாதான கோசத்துடன் பதவியில் அமர்ந்த ஜனாதிபதி ஐக்கிய தேசிய முன்னணியின் சமாதான முயற்சிகளுக்கு இடையூறு செய்யும் வகையில் தனது அதிகாரங்களைப் பிரயோகிக்க முயற்சிக்கின்றார்.

ஜே.ஆர். காலத்திலிருந்து ஜனாதிபதி பதவி வகித்த எவரும் யுத்தத்தில் புலிகளை வெல்லவில்லை. அவர்கள் முன்னெடுத்த சமாதான முயற்சிகள் எவையும் உளப்பூர்வமாக இல்லாமையால் சமாதானத்திலும் தோல்வியையே சந்தித்தனர். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல யுத்தங்களில் வெற்றி பெற்ற புலிகள் சமாதான நடவடிக்கைகளிலும் அரசைவிட ஒரு படி முன்னணியில் நிற்கின்றனர்.

யுத்தத்தின் மீது மோகங்கொண்டவர்கள் என வர்ணிக்கப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்தில் மிகவும் உறுதியாக உள்ளனர். புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நடைபெறவேண்டிய பல நடவடிக்கைகள் இதுவரை நடைபெறவில்லை. ஒரு சில நடவடிக்கைகள் காலதாமதமாக நடைபெற்றன. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது கடமையை சரியான கோணத்தில் எடுத்துச் செல்கின்றது.

அரசும், புலிகளும் கூறும் குற்றச்சாட்டுகளை உடனுக்குடன் விசாரித்து பிரச்சினைகளைத் தீர்ப்பதில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு மிகுந்த அக்கறையுடன் செயற்படுகிறது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டுள்ளது. வாகரை கடல் பகுதியில் நடைபெற்ற அசம்பாவிதத்துக்கு தாமே காரணம் என அறிவித்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிவேகப் படகுகளில் கடலில் கண்காணிப்புச் செய்யத் திட்டமிட்டுள்ளது.

யுத்தத்தின் ரணத்துக்கு மருந்திட அரசும், புலிகளும் தயாராகிவிட்டனர். தாம் விரும்பிய சமாதானம் தமக்குக் கிடைக்கும் என்பதில் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். ஆனால் அரசாங்கம் இந்த சமாதான முயற்சிகளில் தற்போது காட்டும் வேகம் போதாது. அரசாங்கத்தின் பக்கத்தில் பல்வேறு நெருக்குதல்கள் இருக்கலாம். ஆனால் அவற்றையெல்லாம் வெற்றிகொண்டு தமிழ் மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பும் முயற்சியில் அரசு முழு மூச்சாக ஈடுபடவேண்டும். இல்லையென்றால் பழைய ஏமாற்று அரசியல் இன்னும் தொடர்வதாகவே தமிழ் மக்கள் கருத இடம் உண்டு

மக்களின் நம்பிக்கையை வளர்க்கும் வண்ணம் புரிந்துணர்வு உடன்படிக்கையில் சொல்லப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படவேண்டும். புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும். நேரடிப்பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.




நன்றி தினக்குரல்

### வரலாற்று மேற்கோள்

புதியன செய்யும்போது இன்றைய வரலாறு நம்மை "கைது" செய்யும்; புரட்சி வெற்றி பெற்றபின், நாளைய வரலாறு நம்மை "விடுதலை செய்யும்".

–பிடல் காஸ்டரோ, கியூபா அதிபர்

**வன்னியில் வைத்திய முகாம்...**10ம் பக். தொடர்ச்சி

யடுப்பிரதேசத்தில் அமைந்த மடு வைத்தியசாலை, ஆட்காட்டிவெளி பாடசாலை, வெள்ளாங்குளம் பாடசாலை, ஆகிய மூன்று நிலையங்களிலும் தலா 1500 நோயாளர்களுக்கும் அதிகமானோர் உளவியல் சிகிச்சை, கண்சிகிச்சையுட்பட டலதரப்பட்ட சிகிச்சைகளைப் பெற்றனர். மூன்று நிலையங்களிலும் மாண்புமிகு அமைச்சர் கலாநிதி ஜெயலத் ஜெயவர்த்தனா அவர்கள் வருகை தந்து மக்களது சுகதுக்கங்களையும், குறைப்பாடுகளையும் கேட்டறிந்து அவர்களுடன் மனித நேய உணர்வுடன் உரையாடி, அனுதாபத்துடன் செவிமடுத்த நிகழ்வுகள் தம் நெஞ்சை உருக்கியதெனவும், சமாதானத்தை நோக்கிய உறவுப்பால நிகழ்வின் மற்றுமொருபடி இதுவெனவும் வாழ்வுதய இயக்குனர் அருட்திரு. S.யேசுராஜா அவர்கள் மன்னாவுக்கு தெரிவித்தார்.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 2

### மாற்கு நற்செய்தி (புதிய மொழிபெயர்ப்பு)

வாசகர்களே, மாணவர்களே உங்கள் விவிலிய அறிவை பரீட்சிக்கவும் விவிலியத்தை வாசிக்கத் தூண்டவும் இக்குறுக்கெழுத்துப்போட்டியை தொடர்ச்சியாக நடாத்த திட்டமிட்டுளளோம.

கீழே உள்ள பெட்டிகளைக் கொண்ட படிவத்தை நீங்களே தயாரித்து வெற்றிடங்களை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். (வெட்டி அனுப்புவதானால் உங்கள் மன்னா பத்திரிகையை பாதுகாத்து வைக்க முடியாமல் இழக்க நேரிடும்) உங்கள் விடைகளை 31. 07. 2002க்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்டசாலிகளுக்கு பரிசுத் தொகைகள் அனுப்பி வைக்கப்படும்.

**1ம் பரிசு - ரூபா 250, 2ம் பரிசு - ரூபா 150, 3ம் பரிசு - ரூபா 100.**

விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 1 (மத்தேயு நற்செய்தி) யின் விடைகள் மற்றும் சரியான விடை எழுதியோர் பெயர்கள் பரிசு பெறும் அதிஸ்ரசாலிகள் ஆகிய விபரங்கள் அடுத்த மன்னாவில் வெளியாகும்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | 02 | | | | |
| | | | | | 03 | | | | | |
| | 04 | | | 05 | | | | | | * |
| | | * | 06 | | * | | * | 07 | | |
| | | | | 08 | | | 09 | | 10 | |
| | | | | | * | | | | | |
| 11 | | | | | * | | | | 12 | |
| | | | | | | | | | | 13 |
| | | | | | | | | | | 14 |
| | | | 15 | | | | | * | | |
| | 16 | 17 | 18 | * | | | | | 19 | |

### இடமிருந்து வலம்

1. ........................ அவர்களிடம் ஒன்றுமில்லை.
2. தன்னையே........... முடியவில்லை.
3. எல்லா உணவுப் பொருட்களும். ........................................ குறிப்பிட்டார்.
4. அங்கே ........................ யையும் மக்கள் ஓலமிட்டுப் புலம்புவதையும் இயேசு கண்டார்.
5. அவர்கள் அனைவரும் ................. இது என்ன? ............
15. அந்நாள்களில் அவ்வேதனைகளுக்குப் பிறகு ........... இருண்டுவிடும்.

### மேலிருந்து கீழ்

1. இன்னுமா ................................... புரிந்து கொள்ளாமலும் இருக்கிறீர்கள்.
2. ஆகவே பிலாத்து ........................................
4. அவர்களுக்குத் தீய ஆவிகள் மீது................ அளித்தார்.
6. அப்போது எதிர்க் ........................ அடித்தது.
7. தலைமைக் குருக்களும் ........................ அறிஞரும் இயேசுவை ........................ என்று வழிதேடிக்கொண்டிருந்தனர்.
9. இன்னும் நமக்கு .....................கள் தேவையா?
11. ஏனெனில் ஆயரை ................................ அப்போது ஆடுகள் சிதறடிக்கப்படும்.
14. அப்போது ஏறக்குறைய நான்காம் ................ வேளை.

### வலமிருந்து இடம்

3. விண்ணகத்திலுள்ள ........................ மகனுக்கோ கூடத்தெரியாது.
10. அங்கும் நான் நற்செய்தியைப் ............................ வேண்டும்.
13. ........................ எதற்கு ஒப்பிடலாம்.
14. ஏரோதியா அவர் மீது ........................ கொண்டு அவரைக் கொலை செய்ய விரும்பினாள.
19. நான் உம் பகைவரை உமக்கு ............. வைக்கும் வரை நீர் என் வலப்பக்கத்தில் அமரும்.

### கீழிருந்து மேல்

8. இலையடர்ந்த ஓர் ........................ மரத்தை அவர் தொலைவிலிருந்து கண்டு அருகில் ............ சென்றார்.
12. இயேசு தம் சீடரோடு ஒலிவமலை அருகிலுள்ள ........................ பெத்தானியா எனும் ஊர்களுக்கு வந்து ........................ அதை அவிழ்த்துக் கொண்டு வாருங்கள்.
16. அவர்கள் மீது ........................ கொண்டு அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார்.
17. பறவைகள் அதன் நிழலில் தங்கக்கூடிய அளவுக்குக் ........................ விடும்.
18. அவர் எதுவும் செய்யாமலே நாள்கள் ........................ செல்கின்றன.
19. அதை ............................ த்துக் கொண்டு வாருங்கள்.

## மன்னாரில் இருந்து தென்பகுதிக்கு இப்போது பெருமளவு கடலுணவுகள்

மன்னாரிலிருந்து தென்பகுதிக்கு தற்போது பெருமளவு கடலுணவுகள் அனுப்பப்படுகின்றன. போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலானதையடுத்து மீன்பிடித் தடைகள் பல நீக்கப்பட்டுள்ளதால் பெருமளவு மீன்கள் சந்தைக்கு வருகின்றன. இரவுநேர மீன்பிடி நேரத்திலும் தளர்வு ஏற்பட்டுள்ளதுடன், பொலிஸ் சோதனைச் சாவடிகளுக்கு அருகில் வைக்கப்படும் மீன்பிடிப்படகு இயந்திரங்கள் தற்போது மீனவர்களே வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் ஆழ்கடல் சென்று நீண்ட நேரம் மீன்பிடிக்கின்றனர். இதனால் தென் பகுதி வியாபாரிகள் பலர் மன்னார், தலைமன்னார் பகுதிகளுக்கு வந்து கடலுணவு வகைகளை எடுத்துச் செல்கின்றனர். அத்துடன், மன்னாரிலிருந்து 1990ஆம் ஆண்டுக்குப் பிறகு இடம் பெயர்ந்து தென்பகுதியில் வாழ்கின்றவர்களும், வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் மன்னாருக்கு உல்லாசப் பயணம் மேற்கொண்டுள்ளதையும் காணமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

ஆனி, 2002

## யாழ் திருச்சபைக்கு 3 புதிய குருக்கள்

யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதரர்கள் க. பாஸ்கரன், ம. பத்திநாதர், மகன் அலோசியஸ் ஆகிய மூவரும் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர். ஆனி மாதம் 15ம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இத்திருநிகழ்வு இடம் பெற்றது. இவர்கள் தமது முதல் திருப்பலிகளை : க. பாஸ்கரன் பொயிட்டி லூர்து அன்னை ஆலயத்தில் 19ம் திகதியும், ம. பத்திநாதர் புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் 25ம் திகதியும், மகன் அலோசியஸ் இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் 17ம் திகதியும் நிறைவேற்றினர். புதிய குருக்களுக்கு மன்னாவின் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

## புலிகளின் தலைவருக்கு ஆயர் பேரவையின் கடிதம்

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் மேதகு ஓஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகையும் உப தலைவர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் கையொப்பம் இட்ட கடிதம் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 25. 4. 2002 அன்று இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. தனிப்பட்டதும் இரகசியமானதும் என குறிப்பிடப்பட்ட மேற்படி கடிதத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைசாத்திடப்பட்ட பின்னர் நடந்த நிகழ்வுகள் பற்றியும் சமாதான நகர்வுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

## கிறிஸ்தவ வழக்கறிஞர்கள் விவாகரத்து கோரி வழக்காடக் கூடாது! திருத்தந்தை

கத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்த வழக்கறிஞர்கள் விவாகரத்து வழக்குகளை எடுக்கக் கூடாது என்று திருத்தந்தை அவர்கள் கேட்டுள்ளார். கத்தோலிக்கத் திருச்சபையின் திருமணங்களைபரிசீலனை செய்யும் வத்திக்கான் நீதிமன்ற உறுப்பினர்களிடம் உரையாற்றும்போது திருத்தந்தை மேற்சொன்ன வேண்டுகோளை விடுத்தார். நீதிமன்ற நடுவர்களுக்கு மேற்சொன்ன காரியத்தில் பிரச்சனைகள் தோன்றலாம். விவாக ஒன்றிப்பை வலுவாக்க, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்க்க அவர்கள் உழைக்க வேண்டும். ஆனால் வழக்கறிஞர்களுக்கு வழக்குகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளதால் விவாகரத்து வழக்குகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று திருத்தந்தை கூறினார்.

### வாழ்வுதயத்தின் அனுசரணையுடன் அமைச்சர் ஜெயலத் தலைமையில்

# வன்னியில் வைத்திய முகாம்



கடந்த வைகாசி மாதம் வன்னியில் மாபெரும் வைத்திய முகாம் இடம்பெற்றது. 15 வைத்தியர்கள் அடங்கிய குழுவினரைக் கொண்ட இப்பெரும் வைத்திய முகாமில் 5000ற்கும் அதிகமான மக்கள் கலந்து பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை பெற்றனர். மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் வேண்டுகோளின் பேரில் அமைச்சர் கலாநிதி ஜெயலத் ஜெயவர்த்தனா அவர்களின் தலைமையில் வாழ்வுதய நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த 26.5.2002 அன்று இந்த வைத்திய முகாம் இடம்பெற்றது. கடந்த 20 ஆண்டுகளாகத் தாம் பட்ட வேதனைகள், குறிப்பாக வைத்திய வசதியற்றுப் பல உயிர்களைக்கூடப் பலி கொடுத்த துன்பங்களின் மத்தியில், வாழ்ந்து வரும் தமக்குத் தற்போது இடம்பெற்ற இனமதபேதமற்ற இந்தப் பன்முக சிகிச்சை முகாம் பேருதவியாக அமைந்ததென மக்கள் மனமகிழ்ந்து தமது திருப்தியை வெளியிட்டனர்.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

### ஒரு கிராமப் பெண் அனுபவித்ததாகக் கூறப்படும்

# புதுமைகள் தொடர்பாக

## விவேகமாகச் செயற்படுமாறு இந்தோனேசிய ஆயர் அறைகூவல்

இந்தோனேசியாவில் ஒரு கிராமப் பெண் அனுபவித்ததாகக் கூறப்படும் புதுமைகள் தொடர்பாக கருத்து வெளியிடுகையில் அப்புதுமைகளைச் சிறிதுபடுத்தவும் வேண்டியதில்லை, குருட்டுத்தனமாக அவற்றை ஏற்க வேண்டியதுமில்லை எனப் பெரும்பாலும் கத்தோலிக்கர்கள் வாழும் விலோறஸ் தீவு மக்களைக் கேட்டுக் கொண்டார் பேராயர் லோஞ்சினுஸ். ஆயர் என்ற வகையில் முழுக் கவனத்தோடும் நிறைவான பொறுமையோடும் நாம் சொக்கோமாக்கி கிராமத்தில் நடைபெற்றதாகக் கூறப்படுபனவற்றைக் கவனிக்க வேண்டும் எனப் பேராயர் கருத்து வெளியிட்டார்.

2001 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ந் திகதி 25 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயான சுசிலாவதி தன் வீட்டிற்குப் பின்னால் கற்கள் ஒளிவீசுவதைக் கண்டு அதைத் தேடியபோது 15 சென்ரி மீற்றர் உயரமான மரியாளின் சொரூபத்தைக் கண்டெடுத்தாள். அவள் வீட்டில் வைக்கப்பட்டுள்ள அச் சொரூபம் அடிக்கடி இரத்தக் கண்ணீர் சொரிகிறது. அக்கண்ணீர் ரோஜா நறுமணமும் சாம்பிராணி நறுமணமும் கலந்த ஒருவகை வாசனையையும் கொண்டுள்ளது. ஒக்ரோபர் 19ல் சுசிலாவதியின் வலது விலாவிலும், இரண்டு கைகளின் உள்ளங்கைப் பகுதியிலும், பாதங்களிலும் தலையிலும் இயேசுவின் காயங்கள் போன்ற அடையாளங்கள் தோன்றியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மறையருவிக்கு வெள்ளிவிழா

இந்தியாவில் இருந்து வெளிவரும் மறையருவி சஞ்சிகை தனது வெளியீட்டின் வெள்ளி விழாவினை அண்மையில் கொண்டாடியது. தமிழ் மக்களின் இறையியல் அறிவை வளர்ப்பதை நோக்கமாக கொண்டு விவிலியம், இறையியல், கிறிஸ்தவ மரபியல், தமிழ் இலக்கியம் ஆகிய பல்வேறு கண்ணோட்டங்களில் இறை நம்பிக்கையை ஆய்வு செய்யும் கட்டுரைகளை வெளியிடும் பணியை ஆற்றி வந்த மறையருவியின் பணி மகத்தானது. இறையியல் மறையியல் சார்ந்த கட்டுரைகளையே இவ்விதழ் வெளியிடுவதால் பொது நிலையினர் மத்தியில் பெரும் பிரபல்யம் அடையாத ஓர் சஞ்சிகையாக இது விளங்கினாலும், குருக்கள் துறவிகள் மட்டில் பிரபல்யம் பெற்ற ஒரு சஞ்சிகை இது என்பதில் ஐயம் இல்லை. மறையருவியின் மகிழ்ச்சியில் மன்னாவும் பங்கு கொள்கிறது.

## ஒப்புரவு அருட்சாதனம் பற்றிய திருச்சபையின் புதிய ஏடு

பல ஆண்டுகளாக ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட ஒப்புரவு அருட்சாதனம் குறித்த திருச்சபையின் புதிய ஏடு 2. 5. 2002ல் திருத்தந்தையால் வத்திக்கானில் வெளியிடப்பட்டது. காலத்திற்கு ஏற்றபடி, கலாச்சாரங்களுக்கு ஏற்றபடி மதிப்பீடுகள் மாறும்போது அந்த மாற்றங்களுக்கு இசைந்து திருச்சபையின் ஒப்புரவு முறை இன்னும் ஆழமுள்ளதாகவும் அர்த்தமுள்ளதாகவும் மாறுகிறது என திருத்தந்தை கூறினார்.

ஒப்புரவு அருட்சாதனம் ஆலயத்தில் வைத்துத்தான் கேட்கப்பட வேண்டும் அல்லது பங்கு பணியாளர் இல்லத்தில் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டிவைன் தியானக் குழுவினர் மீண்டும் மன்னாரில்

ஆனி மாதம் 9ந் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை அருட் தந்தை அகஸ்ரின் மொண்டேகாட் தலைமையிலான டிவைன் தியான இல்லக் குழுவினரால் மன்னார் மறைமாட்டத்தின் பல இடங்களில் நற்செய்திக் கூட்டங்களும் தியானங்களும் குணமாக்கல் வழிபாடுகளும் நடைபெற்றன. இவை பற்றிய விரிவாக தகவல்களை அடுத்த மன்னாவில் எதிர்பாருங்கள்.

### மன்னார் மறைமாவட்ட

# அன்பியப் பயிற்சிப் பாசறை 2002

மன்னார் மறைமாவட்ட அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான பயிற்சிப்பாசறை கடந்த சித்திரை மாதம் 25 ந் திகதி தொடக்கம் 30ந் திகதி வரை மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் நினைவுகள் இங்கு பதிவாகின்றன.



குருமுதல்வர் சேவியர் குருஸ் அடிகளார்



மறைக்கல்வி இயக்குனர் டெஸ்மன் குலாஸ் அடிகளார்



மறைப்பணியாளர் சவீரி அவர்கள்



மறைப்பணியாளர் செபஸ்ரியாம்பிள்ளை



மறைப்பணியாளர் பென்சமின் அவர்கள்



ஆசிரியர் அந்தோனிமுத்து அவர்கள்



மறைப்பணியாளர் ஞானம் அவர்கள்



அருட் சகோதரி அமலி அவர்கள்

இப்பத்திரிகை தலைமன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org